
# வரலாறு படைப்போம் வாரீர்!



திருச்சி மாநில மாநாட்டில்
தலைவர் கலைஞர் பிரகடனம்

94.8115
AR

# வரலாறு படைப்போம் வாரீர்!

அண்ணா நூற்றாண்டு நூலகம்
- 9 SEP 2010
சென்னை-85

233

திருச்சி மாநில மாநாட்டில்
தலைவர் கலைஞர் பிரகடனம்

தலைமைக் கழக வெளியீடு :

**திராவிட முன்னேற்றக் கழகம்**

அண்ணா அறிவாலயம்
சென்னை 600 018

பிப்ரவரி, 1996.

297759

விலை : ரூ.10/–

894.8115
KAR

DE

அச்சிட்டோர் :
ரவி பிரிண்டெக் ஆப்செட் பிரிண்டர்ஸ்
183 டாக்டர் நடேசன் சாலை,
சென்னை – 5. ✆ : 842816

அண்ணா நூற்றாண்டு நூலகம்
- 9 SEP 2010
சென்னை-85

இந்நூல் ......

1996 ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில் திருச்சியில் எழுச்சிமிகு பேரணியும், அதையொட்டி சரித்திரப்புகழ்பெற்ற கழக 8வது மாநில மாநாடும் நடைபெற்றது.

மாநாட்டின் மூன்றாம் நாள் திரு. முரசொலி மாறன் அவர்கள் அனைத்து மாநிலங்களும் வியக்கத்தக்க அளவில் ஓர் சிறப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து முன்மொழிந்தும், அத்தீர்மானத்தை கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் வழிமொழிந்தும் ஆற்றிய சொற்பொழிவுகளையும் வரலாறு காணாத சிறப்புமிக்க மாநாட்டு நிகழ்ச்சியில் இறுதியாக "தமிழ் சமுதாயத்தை தட்டியெழுப்பவே உறங்காமல் நாம் உழைக்கிறோம் அப்படிப்பட்ட தமிழ்நாட்டு தமிழ்மக்களை ஒளிமயமான எதிர்க்காலத்திற்கு அழைத்துச் செல்ல தி.மு.க.விற்கு உத்திரவு பெற்றுக் கொடுக்க உங்களை நான் அன்பால் அழைத்து பாசத்தில் தோய்த்து நம்பிக்கையை குழைத்து உத்தரவிடுகிறேன். புறப்படு! புலிப்போத்தே புறப்படு, புறப்படு!" என உணர்ச்சிமிக்க ஆற்றிய கழகத்தலைவர் கலைஞர் அவர்களின் உரையினையும் தொகுத்து "வரலாறு படைத்திடுவோம் வாரீர்" என்கிற தலைப்பில் தலைமைக்கழகத்தின் சார்பில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

*என். செல்வேந்திரன்*
வெளியீட்டுச் செயலாளர்
தி.மு.க.

# வரலாறு படைத்த திருச்சி மாநில மாநாட்டில் தலைவர் கலைஞர் பிரகடனம்

26,27,28 ஆகிய மூன்று நாட்களில் திருச்சி மாநகரம் எழிற்கோலம் பூண்டு, எழுச்சிக்கோலம் கண்டு இந்த மூன்றுநாள் மாநாடு நிறைவுறும் கட்டத்தில் சில கருத்துக்களை உங்களோடு பரிமாறிக் கொள்வதற்காக உங்கள் முன்னால் நான் நிற்கிறேன்.

## வரலாறு காணாத மாநாடு மாற்றாரும் பிரமித்த பேரணி

வரலாறு காணாத மாநாடு என்று நானல்ல; நம்மீது அன்பு கொண்ட ஆதரவாளர்கள், ஆர்வலர்கள் மட்டுமல்ல; மாற்றார்களும்கூட, நடுநிலையில் எழுதுகின்ற ஏடுகள்கூட பிரமிக்கின்ற அளவுக்கு இந்த மூன்றுநாள் மாநாடு மிகச்சிறப்புடன் நடைபெற்றிருக்கின்றது.

எத்தனையோ மாநாடுகள், பேரணிகள் நடைபெற்றிருக்கின்றன. கழகத்தின்சார்பில் பல பேரணிகள் நடத்தியிருக்கிறோம். ஆட்சி அகற்றப்படவேண்டும் என்பதற்காக பேரணி நடத்தியிருக்கிறோம். ஈழத் தமிழர்களுக்காக பேரணிகள் நடத்தியிருக்கிறோம். மொழி உணர்வுக்காக இந்திஆதிக்கத்தை எதிர்த்துப் பேரணி நடத்தியிருக்கிறோம். தமிழகத்திலுள்ள பல்வேறு நகரங்களில் நடத்திய மாநாடுகளையொட்டி பேரணிகள் நடத்தியிருக்கிறோம். ஆனால் எல்லா பேரணிகளுக்கும் சிகரம் வைப்பது போன்ற பேரணியாக 26ஆம் தேதி நடைபெற்ற இந்த மாநில மாநாட்டுப் பேரணி அமைந்தது. மாலை 5.30 மணி அளவுக்கு நாங்கள் அமர்ந்து பேரணியைப் பார்வையிட்ட மேடையை பேரணியின் முதல்ஆள் கடந்து அணி, அணியாக பேரணியினர் வரத் தலைப்பட்டு விடிந்து ஏழரை மணிவரை பேரணி நடைபெற்று, அதற்கு மேலும் பேரணி தொடர்கிறது என்ற நிலையில் மாநாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பேரணி மேடையில் இருந்து விடைபெற்று வந்தவர்கள் நாங்கள் என்பதை நேற்றும் இன்றும் பேசிய கழக முன்னோடிகள் தலைவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

14 மணி நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து நானும், பேராசிரியரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும், மற்றவர்களும் அந்தப் பேரணியைக் கண்டோம் என்றாலும், நேற்று பேராசிரியர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டதைப்போல் அவரால், இரவு 2, 3 மணிவரைதான் தாக்குப் பிடிக்க முடிந்தது. தம்பி மாறனால் ஒன்றரைமணி அல்லது இரண்டுமணி அளவில்தான் தாக்குப் பிடிக்க முடிந்தது. நாஞ்சிலாரால் பதினொன்று அல்லது பதினொன்றரைமணி அளவில்தான் தாக்குப்பிடிக்க முடிந்தது. அவர்களைவிட எனக்கு பொறுப்பும் கடமையும் உண்டு. என்னவென்றால்; அவர்கள் யாரும் உங்களை மாநாட்டுக்கு வரச் சொல்லி கடிதம் எழுதியவர்களல்ல; நான்தான் திருச்சிக்கு வா, வா என்று 11 கடிதம் எழுதினேன். பேரணியில் வந்த உங்களைக்காண அவர்கள் மேடையில் இல்லாவிட்டாலும், "அவர்கள்தான் இல்லை கடிதம் எழுதினாரே இவர் எங்கே?" என்று கேட்பீர்கள் என்ற காரணத்தால் உங்களைக்காண வேண்டுமென்ற பாசஉணர்வினாலும் காலை ஏழரைமணிவரை நான் அங்கே அமர்ந்திருந்தேன்.

என்னை தம்பி துரைமுருகனும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும் "இதற்கு மேலும் உண்ணாமல், உறங்காமல் கண்விழிப்பது நல்லதல்ல; மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும்!" என்று வலிந்து இழுத்துக்கொண்டு, தங்குகிற விடுதிக்கு என்னை அழைத்து வந்தார்கள்.

## தமிழ்ச் சமுதாயத்தை தட்டி எழுப்பவே உறங்காமல் நாம் உழைக்கிறோம்

ஒருநாள் இரவு முழுவதும் உண்ணவில்லை, உறங்கவில்லை. நான் இதை பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. நாங்களாவது ஒரு இடத்தில் உட்கார்ந்து உண்ணாமல், உறங்காமல் உங்களைப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் உடன்பிறப்புகளே, நீங்கள் சிந்தாமணியில் உள்ள அண்ணாசிலையிலிருந்து இந்த மாநாட்டுப் பந்தல் வரை பல கிலோமீட்டர் தூரம் நடந்தே வந்தீர்கள் – உறங்காமல், உண்ணாமல் வந்தீர்கள். நீங்களும் உறங்கவில்லை. நானும்

உறங்கவில்லை. நாமிருவரும் உறங்காமல் இருப்பதற்கு காரணம்; உறங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்ச்சமுதாயத்தைத் தட்டி எழுப்புவதற்காகத்தான்! (பலத்த கை தட்டல்) அதனால்தான் உறங்காமல் இருந்தோம்.

இந்தச் சமுதாயத்தை எழுப்ப நடைபெறுகின்ற பல்வேறு கட்ட முயற்சிகளில் ஒன்றுதான் இந்த எட்டாவது மாநிலமாநாடாகும். இந்த மாநாட்டுப் பேரணியில் இளைஞரணியினர், அணிவகுத்து வந்தனர். அது ஒரு கண்கொள்ளக் காட்சியாக இருந்தது. "இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்" என்று அண்ணா சொல்வாரே, அதை நினைவூட்டுவதாக இருந்தது. அதை வென்று காட்டுகிறோம் என்பதைப்போல தொழிலாளர் அணியினர் அணிவகுத்து வந்தனர். மாணவர்அணியினர், மகளிர் அணியினர், விவசாயஅணியினர், வழக்கறிஞர்அணியினர், இலக்கிய அணியினர், தொண்டர்அணியினர் ஆகிய அத்துணை அணிகளும் – ஒவ்வொரு அணியிலும் பல்லாயிரக்கணக்கானோர், வந்தார்கள்.

அந்தப் பேரணியில் அன்றைக்குப் பங்குகொண்டவர்களின் எண்ணிக்கை சற்றொப்ப சரியாகக் கணக்கிட்டுச்சொல்ல வேண்டுமேயானால் 25 லட்சம் பேர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்தது. இத்தகைய ஒரு மகத்தான பேரணியை நடத்துகின்ற ஆற்றலைப் பெற்றவர்கள் – அந்தப்பேரணியை அமைத்துத் தந்தவர்கள் அனைவரும் வாழ்த்துக்குரியவர்கள், பாராட்டுக்குரியவர்கள் இங்கே பாலகிருஷ்ணன் நன்றி கூறினார். நானும் அந்தப்பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு நன்றி கூறுவது இந்த கழகத்தின் தலைவன் என்ற முறையிலே எனக்குரிய கடமையாகும்.

## பொறுப்பேற்றுப் பணியாற்றிய போற்றுதலுக்குரியவர்கள் !

வரவேற்புக்குழுத் தலைவர் தம்பி நேரு இந்த மாநாட்டின் வெற்றிக்கு முழுப்பொறுப்பு என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது. அவர் பட்டிருக்கின்ற இன்னல்கள் – அவர் ஆற்றியிருக்கின்ற பணி – ஒவ்வொரு நாளும் திருச்சியிலிருந்து சென்னைக்கு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்வது மட்டுமல்ல; காலையில் ஒரு செய்தி

கேள்விப் பட்டால் மாலையில் சென்னைக்கு நேரில் காரில் வந்து என்னை, பொதுச் செயலாளரை, பொருளாளரைக் கலந்து கொண்டு பணியாற்ற உடனடியாக திருச்சிக்கு விரைந்து வருகின்ற ஒரு நிலை. இதனையெல்லாம் என்னால் மறக்க முடியாது.

செயலாளர்களாகப் பணியாற்றியவர்கள் தம்பி கோ.சி. மணி, புதுக்கோட்டை பெரியண்ணன் தம்பி செல்வேந்திரன், தம்பி பரமத்தி சண்முகம், தம்பி சிவசுப்பிரமணியம், தம்பி அம்பலவாணன் – இந்தச் செயலாளர்களில் தம்பி கோ.சி. மணி என்னை வழிமொழிந்து பேசுகிற நேரத்தில் மேடையில் சந்தித்தேன், அவர் பேசும்பொழுது ஒரு சொற்றொடரைச் சொன்னார், "என்னுடைய உயிரையும் மீட்டுத்தந்த தலைவர்!" என்று சொன்னார். அந்த உயிரை மீட்க நானும், பேராசிரியரும், பொருளாளரும், மற்றவர்களும் பாடுபட்டது எங்களுக்காக அல்ல; இந்த இயக்கத்திற்காக! இந்தக் கழகத்திற்காக! கழகத்திற்காக என்றால் இந்தச் சமுதாயத்திற்காக! அவர் உடல்நலிந்த நிலையில் இந்த மாநாட்டுப் பணிகளை தன்னால் இயன்ற அளவுக்கு ஆற்றியிருக்கிறார். எனவே அவரைப் போற்றுகிறேன், புகழ்கிறேன்.

அதைப்போலவே தம்பி பெரியண்ணனும், செல்வேந்திரனும், பரமத்தி சண்முகமும், சிவசுப்பிரமணியமும், அம்பலவாணனும் தலைமைக் கழகத்தின் பாராட்டுக்குரியவர்கள்.

துணைச் செயலாளர்கள் திருச்சி நகரக் கழகச் செயலாளர் தம்பி கே.கே.எம். தங்கராசு, நாகவேணி வேலு, ரெங்கையன், சுப. ராசகோபால், சிவராமன், செழியன், டாக்டர் தேவராசன், மெகன் என்ற கிருஷ்ணன், மகாராஜன் ஆகியோர் துணைச்செயலாளர்களாக இருந்து அரும்பாடுபட்டு அரிய பணிகளை இந்த மாநாட்டுக்கு, மாநாட்டின் வெற்றிக்காக ஆற்றியிருக்கிறார்கள்.

நிதிக்குழுத் தலைவர் நண்பர் பாலகிருஷ்ணனும், அவருக்கு ஆதரவாக இருந்து தலைமைக் கழகத்தின் சார்பாக பொருளாளராகப் பணியாற்றிய ஆர்க்காடு வீராசாமியும் இந்த மாநாட்டின் வாயிலாக

தேர்தல்நிதி, கழகநிதி, பெருநிதி கிடைக்க தம்பி நேருவுடன் ஒத்துழைத்திருக்கிறார்கள்.

நிதிக்குழுவின் துணைத்தலைவர்களாக அரியலூர் ஆறுமுகமும், மாயவனும் இருந்து தொண்டாற்றியிருக்கிறார்கள். விளம்பரக்குழுச் செயலாளராக தம்பி உபயதுல்லா, புதுக்கோட்டை அஞ்சுகா மீனாட்சிசுந்தரம் ஆகியோர் பணியாற்றி இருக்கிறார்கள். அலுவலகப் பொறுப்பாளர்களாக தம்பி டி.எஸ். கல்யாணசுந்தரம், தம்பி பொன்மலை ராமச்சந்திரன் ஆகியோர் பணியாற்றியிருக்கிறார்கள்.

தீர்மானக்குழுச் செயலாளர் தம்பி சிவா மாணவரணிக்கும் செயலாளர். அவர் தலைமைக்கழக தீர்மானக்குழுச் செயலாளர் தம்பி இரகுமான்கானுடன் கலந்து தீர்மானங்களை எல்லாம் வடித்தெடுக்கின்ற பொறுப்பிலே இருந்திருக்கின்றார்.

## வெற்றிக்குப் பாடுபட்ட – பணியாற்றிய அனைவரையும் பாராட்டுகிறேன்

பந்தல்குழுச் செயலாளர் என்னுடைய பழம்பெரும் நண்பர் எஸ்.ஏ.ஜி. இராபி, மேடைக்குழுச் செயலாளர் அசோகன், மேடை அலங்காரத்தைக் கவனித்துக்கொண்ட தம்பி ஜான் பீட்டர், ஊர்வலக் குழுச் செயலாளர் என்னுடைய ஆருயிர் நண்பர் அன்பிலின் மகன் பொய்யாமொழி, உபசரிப்புக்குழு ஆதிமூலம், நாகசுந்தரம், காஞ்சனா ராமகிருஷ்ணன், ரங்கன் ஆகியோர், தென்னரசு தியாகிகள் மணிமண்டபத்தையும், திராவிடஇயக்க வரலாற்றுக் கண்காட்சிக் கூடத்தையும் உருவாக்கப்பாடுபட்ட செயலாளர் வெற்றி கொண்டான், இளவேனில், இரத்தினகிரி, கவிதைப்பித்தன், வண்ணை அரங்கநாதன், இவர்களுக்கெல்லாம் உறுதுணையாக இருந்த மாநில இளைஞரணிச் செயலாளர் தம்பி ஸ்டாலின், தொண்டரணிக்கு தம்பி மிசா. கணேசன் செயலாளராக இருந்தாலும் அவருடைய மேற்பார்வையில் இந்த மாநாட்டின் தொண்டரணித் தலைவராகப் பணியாற்றிய மதிவாணன், துணைத் தலைவர்கள் நாகராஜன், பச்சைமுத்து ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மகளிர் தொண்டரணித் தலைவர்களாக ராஜாமணி ரங்கராஜன், துணைத்தலைவர்களாக காரல்மார்க்ஸ், உஷா, சரோஜினி தங்கராஜ், அலுவலகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட செங்குறிச்சி கருப்பையா, டோல்கேட் சுப்பிரமணியம், எம்.ஆர். மாயழகு, வைரமணி, குணசீலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், தம்பிதுரை, நகர அலங்காரக் குழுச் செயலாளராக அரும் பணியாற்றிய அரங்கராசன் இவர்களெல்லாம் இந்த மாநாட்டின் எழிலுக்கும், ஏற்றத்திற்கும், எழுச்சிக்கும் பொறுப்பானவர்கள். போற்றத் தகுந்தவர்கள்.

## மாநாட்டு நிதி வசூல்

இந்த மாநாட்டில் வழக்கம்போல் நிதிவசூல் எவ்வளவு என்பதை வெளியிடுகின்ற அந்தப்பொறுப்பு நான் ஒரு காலத்திலே அண்ணா அவர்களால் பொருளாளராக நியமிக்கப்பட்டு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாகவோ என்னவோ நான் தலைவன் ஆனாலும்கூட நிதிவசூலிக்கின்ற அந்தப் பொருளாளர் பொறுப்பை நானேதான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

என்னிடத்தில் வரவேற்புக்குழுத் தலைவர் திருச்சி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி நேரு, கழகத் தேர்தல் நிதியாக காசோலையைத் தந்திருக்கிறார். அதைப்பெரிய பெட்டியில் வைத்துதர முடியாத காரணத்தால் அதைக்காசோலையாக தருமாறு கேட்டுக்கொண்டேன். அவரும் அதைக்காசோலையாகத் தந்திருக்கிறார். தேர்தல் நிதியாக தந்துள்ள தொகை 75 லட்ச ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதுதவிர மாநாட்டின் நுழைவுக்கட்டணம் மற்றும் மாவட்டக் கழகச் சார்பில் வசூலிக்கப்பட்ட தொகை 25 லட்சத்து 32 ஆயிரத்து 530 ரூபாய் ஆகும். எனவே மொத்தத் தொகை ஒரு கோடியே 32 ஆயிரத்து 530 ரூபாய் ஆகும். இது மாநில மாநாடு என்ற காரணத்தால், தலைமைக் கழகமே முன்னின்று நடத்துகின்ற காரணத்தால், அந்த வரவு செலவுக் கணக்கு விரைவிலே முடிக்கப்பட்டு பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தணிக்கைக் குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்து

அறிக்கைதந்து அடுத்த பொதுக்குழுவில் மாநாடு வரவு – செலவுக் கணக்குகள் தலைமைக்கழகத்தின் சார்பில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தொகையை எட்டுவதற்குத் துணைபுரிந்த திருச்சி மாவட்டக்கழகப் பொறுப்பாளர் தம்பி நேருவுக்கும், திருச்சி மாவட்டத்தினுடைய கழகக் கண்மணிகள், செயல் வீரர்கள் அனைவருக்கும், இந்த வரவேற்புக்குழுவில் இடம்பெற்றுள்ள குழுவின் செயலாளர்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் தலைமைக்கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியை, பாராட்டுதலை வழங்குகின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றேன்.

## "உள்ளே மாநில மாநாடு; வெளியே மாவட்ட மாநாடு!"

இங்கே அமர்ந்திருக்கின்ற உங்களை எல்லாம் பார்க்கிறேன்; நான் சற்று தாமதமாக இந்த மாலை நேரமாநாட்டு நிகழ்ச்சிக்கு வந்தபொழுது இன்று "மாலை முரசு" பத்திரிகையில் ஒரு செய்தி வெளியிட்டிருப்பதைப் போல், "உள்ளே மாநில மாநாடு, வெளியே மாவட்ட மாநாடு" என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நான்வந்த கார் உள்ளே நுழைய முடியாத அளவுக்கு மனிதத் தலைகளெல்லாம் அலைகளாக மாறி அதிலே கார் தெப்பமாக மிதந்து வருகிறதோ என்று எண்ணுகிற அளவுக்கு இந்த மாநாட்டுப் பந்தலுக்குள் நான் நுழைந்தேன். மாநாடு நடைபெறுகின்ற இடம் நம்மையெல்லாம் ஆளாக்கிய அருந்தலைவர் அறிஞர் அண்ணா பெயரால் அமைந்துள்ள "அண்ணாநகர்" என்று பெயர் பொறிக்கப்பட்ட இடமாகும்.

கொட்டப்பட்டு என்பது இதனுடைய பழைய பெயராக இருந்தாலும் கூட, அண்ணாநகர் என்ற புதிய பெயரை நம்மால் பெற்றிருக்கின்ற இந்த இடம் மாநாட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று தம்பி நேரு என்னிடத்தில் சொன்னபோது நானும், பொருளாளரும், துரைமுருகனும், தமிழ்க்குடிமகனாரும் இந்த இடத்தைப் பார்ப்பதற்காக வந்தபொழுது புதர் மண்டிய இடமாக, புற்றுக்கள் நிறைந்த இடமாக, நடப்பதற்கே இயலாத இடமாக இந்த இடம் இருந்தது.

இந்த இடத்தை இவ்வளவு எழில்மிக்க இடமாக மாற்றி மணல் கொட்டிப் பரப்பி இலட்சக்கணக்கானோர் அமர்வதற்கேற்ற இடமாக சிங்காரித்துள்ள இந்த இடத்தைப் பார்க்கும்பொழுது, இந்தத் திறமையைக் காணுகிற நேரத்தில் நான் எண்ணிக் கொள்கிறேன்; நான் அன்று பார்த்த கொட்டப்பட்டாகத்தான் இன்றைய தமிழகம் இருக்கிறது. இன்று பார்க்கிற கொட்டப்பட்டாக தமிழகம் மாறவேண்டும் என்பதற்காகத்தான் இங்கு நம்முடைய மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா பெயரால் அமைந்துள்ள இந்த நகரில் நாம் அமைத்திருக்கின்ற பந்தலுக்கு பெயர் அன்பில் தர்மலிங்கம் பந்தல்.

## திருச்சி என்றதும் என் நெஞ்சில் அலைமோதும் உணர்வுகள்!

எனக்கு எத்தனையோ நினைவுகள்; திருச்சி என்றாலே, உருக்கமும் உணர்ச்சியும் போட்டிபோட்டு எழுகின்ற உணர்வு என் உள்ளத்திலே மோதிக்கொண்டேயிருக்கும்.

இந்த திருச்சி மாநகரத்தில் எனக்கு நண்பனாக, சகோதரனாக, என் உயிர்த்தோழனாக, என்னுடைய மெய்க்காப்பாளர் என்று சொல்லிக் கொள்கிற பெருமை உடையவராக வாழ்ந்தவர்தான் என் ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கம். இதுபோன்ற மேடைகளில் ஒருபக்கத்தில் அன்பில் வீற்றிருக்க, இன்னொரு பக்கத்தில் என்னை மகனைப்போல வளர்த்த தாயாக விளங்கிய மன்னை நாராயணசாமி வீற்றிருக்க, நான் என்ன பேசுகிறேன் என்ற காட்சியை அவர்களெல்லாம் கண்டுகளித்து சுவைத்து ரசித்திட அன்று நான்பெற்ற அந்தப்பேற்றை இன்றைக்குப் பெற முடியவில்லை. அவர்களெல்லாம் படங்களாக மாறிவிட்டார்கள். பந்தலுக்கும், முகப்புக்கும் பெயர்களாக ஆகிவிட்டார்கள்.

அன்பில் பந்தல், மன்னை நாராயணசாமி முகப்பு, அமைதியின் உருவம் என்று கழகத் தோழர்களால் பாராட்டப் பெற்ற என் அருமை நண்பர், கழகத்தின் முன்னாள் பொருளாளர் சாதிக்பாட்சா பெயரால் அமைந்துள்ள

அரங்கத்தின் முன்நின்று பேசுகிறேன். சிறுகதை மன்னனாக விளங்கிய, தென்பாண்டி மண்டலத்திலே 'South King' என்று ஆங்கிலத்திலே நண்பர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட தென்னரசு. பெரியமருது என அழைக்கப்பட்ட மதுரை முத்துவும், சின்னமருது என்று அழைக்கப்பட்ட அந்த தென்னரசுவும் இன்றைக்கு இல்லை. அந்த தென்னரசு பெயரால் அமைந்துள்ளது தியாகிகள் மணி மண்டபம்.

திருச்சியிலே ஒரு தோழன். இந்த மாநகரத்தின் செயலாளராக இருந்து பணிபுரிந்து திருச்சியை கழகப் பாசறையாக மாற்றிக் காட்டியவன் ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி. ஆங்கிலப் புலமையும், தமிழ்ப்புலமையும் பெற்றவர் அந்த கிருஷ்ணமூர்த்தி இன்றைக்கு இல்லை. அந்த ஏ.வி.கே. பெயரால் திராவிடஇயக்க வரலாற்றுக்கூடம், மாநாட்டுக்கு முதல்நாளே வந்து விட்ட காரணத்தாலும், அந்த மாநாட்டு மேடையின் இருபுறத்திலும் வைக்கப்பட்டுள்ள மறைந்த தியாகிகளின் மணி மண்டபத்தையும், திராவிட இயக்க வரலாற்றுக் கூடத்தையும் சென்னையில் அன்பகத்தில் வைத்து, ஸ்டாலினும், பொய்யாமொழியும் இளைஞரணியினரும் மற்றுமுள்ள, இளவேனிலும், கழகக் கண்மணிகளும் தயாரித்துக் கொண்டிருந்த போதும் சரி; இங்கே இந்த மண்டபத்தில் அனைத்தும் அமைக்கப்பட்டு தொடங்கிய போதும் சரி அவைகளை எல்லாம் பார்த்தேன். கொடியேற்று விழாவை நடத்தி வைத்துவிட்டு நானும், நாஞ்சிலாரும், பொருளாளரும், துரைமுருகனும், தம்பி மாறனும் அந்த இரண்டு பகுதிகளுக்கும் சென்றோம்.

மறைந்த தியாகிகள் மணிமண்டபத்தில் தந்தை பெரியாருடைய நினைவகத்தை அமைத்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணாவினுடைய நினைவகத்தை அமைத்திருந்தார்கள். நூற்றுக்கு மேற்பட்ட திராவிட இயக்கத்தினுடைய தளபதிகள் இன்றைக்கு உயிரோடு இல்லாவிட்டாலும், நமது ஊனோடும், உதிரத்தோடும் கலந்தவர்கள். அவர்களுடைய படங்கள் எல்லாம் அங்கே இருந்த காட்சியைப் பார்த்தேன். எண்ணிக் கொண்டேன். எவ்வளவுபேர் இருந்தார்கள். எவ்வளவுபேரோடு நாம் இருந்தோம். இன்றைக்கு அவர்கள்எல்லாம் இல்லை. நாங்கள் ஒரு ஐந்தாறுபேர்தானே

அவர்களில் மிச்சமிருக்கிறோம் என்று எண்ணியபொழுது எல்லாப்படங்களையும் பார்க்க முடியாமல் நீர்ப்படலம் என் கண்பார்வைகளை மறைத்துக் கொண்டது.

## முரசொலி மாறன் எழுதிய "திராவிட இயக்க வரலாறு'

திராவிடஇயக்க வரலாற்றுக் கண்காட்சியில் 1916ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இந்த இயக்கம் திராவிடர்சங்கமாக, பிராமணரல்லாதார் இயக்கமாக, நீதிக்கட்சியாக, சுயமரியாதை இயக்கமாக, திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ந்துள்ள அந்த வளர்ச்சியை சித்திரங்கள் மூலமாக காட்டியிருக்கின்ற அந்த மாட்சியைப் பார்த்தேன். அதைப்பார்த்தபொழுதுதான் இந்த மாநாட்டில் நான் பேசுகின்ற பேச்சின் தொடக்கத்திற்கு ஒரு கருப்பொருளே கிடைத்தது.

திராவிடஇயக்க வரலாற்றை தம்பி முரசொலி மாறன் எழுதியிருக்கிறார். அந்த வரலாற்றுக் கண்காட்சியைப் பார்த்தபொழுது மாறன் எழுதிய அந்தப் புத்தகத்தின் சில பக்கங்கள் நினைவுக்கு வந்தன. அதில் ஒரு இடத்தில் குறிப்பிடப்படுகிறது;

> "திராவிட நாகரிகம் மனிதனுக்கு மனிதன் பிறப்பினால் பேதம் உண்டு' என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. திராவிடச் சிந்தனைகளின் தலைவர்களான திருவள்ளுவர், ஔவையார், கம்பர் போன்றோர் பிரம்மாவின் தலையில் இருந்து பிறந்ததாக தங்களை பறைசாற்றிக் கொள்ளவில்லை. பிறப்பினால் பேதம் உண்டு என்று பரப்பியவர்களும், பல்வேறு கொடுமைகளுக்குக் காரணமான வர்ணாசிரமதர்மம் என்னும் முறைப்படி அதை விரிவுபடுத்தியவர்களும் சாதி ஆதிக்கவாதிகளே" இது ஒரு பகுதி.

## சர்.பிட்டி. தியாகராயர் அன்றைக்கே சொன்ன கருத்து!

அடுத்தப்பகுதி அந்தப்புத்தகத்தில் "நாம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பரம்பரைகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இங்கு

ஆங்கிலேயர்கள் அடியெடுத்துவைப்பதற்கு முன்பே சக்ரவர்த்திகளாக இருந்த அசோகர், சந்திரகுப்தர், அக்பர் ஆகியோர்களுக்கு எதிராக தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்" என்பதாகும். இவை இருவர் பேசிய பேச்சுக்களின் பகுதிகளாகும். இப்படிச் சொன்னவர்கள் யாராக இருக்கமுடியும் என்று கருதுகிறீர்கள்? பெரியாரா? அண்ணாவா? நானா? பேராசிரியரா? என்றால் இல்லை. 1917ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் சர்.பிட்டி. தியாகராயர் சொன்னார். "திராவிட நாகரிகம் மனிதனுக்கு மனிதன் பிறப்பினால் பேதம்உண்டு என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. திராவிடசிந்தனைகளின் தலைவர்களான திருவள்ளுவர், ஔவையார், போன்றவர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்ததாக தங்களைப் பறைச்சாற்றிக் கொள்ளவில்லை" என்று சர்.பிட்டி. தியாகராயர் சொன்னார் 1917ல்.

அடுத்து – "நாம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இங்கே ஆங்கிலேயர் அடியெடுத்துவைப்பதற்கு முன்பே சக்ரவர்த்திகளாக இருந்த அசோகர், சந்திரகுப்தர், அக்பர் இவர்களுக்கு எதிராக தங்களது சுதந்திரத்தை காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்" என்று சொன்னவர் 1918ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாள் மதுரை பிராமணரல்லாதார் மாநாட்டில் தலைமையுரையாற்றிய திருச்சியைச் சேர்ந்த பாரிஸ்டர் டி.சி. தங்கவேலுப் பிள்ளை.

## இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உருவான திராவிட இயக்கம்!

இந்தக் கருத்துக்களை அவர்கள் இருவரும் எப்பொழுது சொன்னார்கள். 1917, 1918ஆம் ஆண்டுகளில். அந்த நேரத்தில் நானும் பிறக்கவில்லை. பேராசிரியரும் பிறக்கவில்லை. அறிஞர் அண்ணாவுக்கு அப்பொழுது ஏழு, அல்லது எட்டு வயது இருக்கலாம். பெரியாருக்கு 38 வயதோ, 39 வயதோ இருக்கலாம். அவர் தமிழகத்திலே பெரும் செல்வாக்கு மிக்க புள்ளியாக அறிமுகப்படுத்தப்படாத காலத்தில் – பெரியார்

செல்வாக்கு பெறாத காலத்தில் – அண்ணா ஏழு, எட்டு வயது சிறுவனாக இருந்த காலத்தில், நானும் பேராசிரியரும் பிறக்காத காலத்தில் – சொல்லப்பட்ட கருத்துக்கள்தான் நான் இங்கே படித்துக்காட்டிய கருத்துக்கள். இந்த வழிதான் திராவிட இயக்கத்தினுடைய மூலவழி! இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் முதலில் உருவான சமுதாயச் சீர்திருத்த இயக்கம் நம்முடையதுதான் என்று எடுத்துக்காட்டுகின்ற வாசகம்தான் தியாகராயரும், திருச்சி பாரிஸ்டர் தங்கவேலு பிள்ளையும் ஆற்றிய உரை.

1917ஆம் ஆண்டிலும், 1918ஆம் ஆண்டிலும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இந்தியாவிலே சமுதாயச் சீர்திருத்த இயக்கத்திற்கு முதல் தொடக்கவிழா நடத்தியது நம்முடைய இயக்கம்தான். Social Justice என்று சொல்லப்படுகின்ற சமூகநீதியானாலும், Secularism எனப்படுகின்ற மதச்சார்பின்மையானலும் Casteless Society எனப்படுகிற சாதிச்சார்பற்ற சமூகமானாலும் அதற்கு அடிக்கல் நாட்டிய இயக்கம் நம்முடைய இயக்கம்.

## மதச்சார்பின்மை நமது இயக்கத்தின் உடன்பிறந்த கொள்கை!

மதச்சார்பின்மை என்பது நம்முடைய உடன்பிறந்த கொள்கை. இன்றைக்கும் தஞ்சை மாவட்டத்தில் நீங்கள் சென்று கேட்டால் 'நான் இஸ்லாமியன்' என்று ஒரு முஸ்லீம் சகோதரர் தன்னைச் சொல்வதைக் காட்டிலும் 'இஸ்லாம் ஆனவர்' என்றுதான் சொல்லிக் கொள்வார். அந்த அளவிற்கு நாமெல்லாம் தமிழர்கள்தான். அவர் முஸ்லீமாக இருந்தாலும், கிறிஸ்தவராக இருந்தாலும் தமிழர்கள்தான். அதனால்தான் 'இஸ்லாமானவர்கள்' என்று நாம் ஒரே வாக்கியத்தில் சொன்னாலும்கூட `இஸ்லாம் ஆனவர்கள்' என்பதுதான் உண்மை. – வரலாற்று உண்மை. எனவே மதச்சார்பற்ற தன்மை, திராவிட இயக்கத்திற்கு உடன்பிறந்த கொள்கையாகும். அதைப்போல சாதிகளற்ற சமுதாயம் தியாகராயர் கோடிட்டுக் காட்டியதைப் போல திருவள்ளுவர் காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

என்றார் வள்ளுவர்.

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒன்றுதான். ஆனாலும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளினால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை என்று பலபொருள்கள் இருந்தாலும் உண்மையான கருத்து என்ன? ஒருவர் கருமாராக இருக்கிறார். ஒருவர் பொற்கொல்லராக இருக்கிறார். ஒருவர் எழுத்தாளராக இருக்கிறார். ஒருவர் பொறியாளராக இருக்கிறார். அந்தத்தொழில்வழி பார்த்தால் அவர்கள் வேறுபட்டவர்கள் அல்ல. அவர்கள் 'செய்தொழில் வேற்றுமை'யால் அவர்கள் செய்கின்ற தொழிலில்; எழுத்தாளர் தொழிலில் யார் சிறப்பாக இருக்கிறானோ, தச்சு தொழிலில் யார் சிறப்பாக இருக்கிறானோ, பொறியாளர் தொழிலில் யார் சிறப்பாக இருக்கிறானோ, அதிலே தான் வேறுபடுகிறோமே தவிர பிறப்பினால் வேறுபட்டவர்கள் அல்ல; என்ற கருத்தை வள்ளுவர் பெருமான் அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறார்.

## தமிழகத்தில் சாதிக்கலவரம் தலைதூக்கக் காரணமானவர்கள்

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று சங்கப்புலவர் கணியன் பூங்குன்றன் சொன்ன அந்த வரிகளைத்தான் பிரதமர் இந்திராகாந்தி ரஷ்ய நாட்டுக்குச் சென்றபோது "எங்கள் நாட்டில் ஒரு தமிழ்ப்புலவன் சொன்ன வார்த்தை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதை எடுத்துக்காட்டி பேசினார். அந்த அளவுக்கு சாதி சார்பற்ற, மதச்சார்பற்ற ஒரு தன்மைக்கு முதலிடம் தரப்பட்டு அதை வரவேற்று, அதற்கு வலுவைத் தருகிற எல்லா கூறுகளையும் உருவாக்கிய இயக்கம் திராவிடர் இயக்கம்.

இன்றைக்குக் கேள்விப்படுகிறோம், காண்கிறோம், செய்திகளில் படிக்கிறோம். இந்தத் தமிழகத்தில் சாதிக்கலவரம் ஆங்காங்கு தலைதூக்குவதை, அதிலும் குறிப்பாக தென்மாவட்டங்களில் சாதிக்

கலவரம் நடைபெறுகிறது என்றால், தமிழ்நாட்டில் சாதிப்பேய் தலைவிரித்தாடுகிறது என்றால், அண்மையில் தென்மாவட்டங்களில் மாத்திரம் ஐம்பது, அறுபதுபேர் உயிர் இழந்திருக்கிறார்கள் என்றால் இதற்கெல்லாம் காரணம் யார்? நம்முடைய இயக்கத்தில் வந்தவர்களாகச் சொல்லிக்கொண்டு, ஆனால் இந்த இயக்கக் கொள்கைகளைப்பற்றி அணுவளவும் தெரியாமல் ஆட்சிப்பொறுப்பிலே அமர்ந்திருக்கின்ற ஜெயலலிதா – அவர் நடத்துகின்ற ஆட்சிதான் இதற்கெல்லாம் காரணம்!

தமிழக முதல்வராக இருக்கிற ஜெயலலிதாவிற்கு சரித்திரமும் தெரியாது – பூகோளமும் தெரியாது – சமுதாய அமைப்பும் தெரியாது – தெரிந்ததெல்லாம் லஞ்சம் வாங்குவது எப்படி? என்ற கலைமாத்திரம் தான்! இதை ஆங்கிலத்திலே அழகாகச் சொல்லவேண்டுமேயானால்; "She doesn't know either the history of Tamilnadu or the Geography of Tamilnadu nor the sociology of Tamilnadu - she only knows to get bribes - she has mastered that art" என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே Social Justice சமூகநீதியைப்பற்றியோ, Secularism – மதச்சார்பின்மையைப் பற்றியோ Casteless Society – சாதிகளற்ற சமூகம் பற்றியோ – ஜெயலலிதா கவலைப்படுவதில்லை. ஜெயலலிதா மாத்திரம் அல்ல; மத்தியில் ஆட்சி நடத்துகிற நரசிம்மராவும் கவலைப்படுவதில்லை. அவர்கள் கவலைப்படாத காரணத்தினால்தான் மதச்சார்பற்ற தன்மை என்ற கொள்கையை வைத்துக் கொண்டு, Secularism என்று கூறிக் கொண்டு புட்டபர்த்தி சாயிபாபா காலில் விழுகிறார் – பிரதமர் நரசிம்மராவ்! அவரோடு போட்டி போட்டுக்கொண்டு ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவும் விழுந்து எழுகிறார்.

காஞ்சிபுரத்திற்கு வருகிறார்கள் அவர்கள். சங்கராச்சாரியார் காலில் ஜனாதிபதியும் விழுகிறார். பிரதமரும் விழுகிறார். இந்தியாவின் பிரதமராக பண்டித ஜவஹர்லால் நேரு இருந்தார். அவர் நாத்திகர் – மதச் சார்பற்ற தன்மையை முறையாகக் கடைப்பிடித்தார். உண்மையாக கடைப்பிடித்தார். அதில் போலித்தனம் காணவில்லை. பண்டிதநேரு நாத்திகர். அதனால் மதச் சார்பற்ற தன்மையை சரியாகக் கடைப்பிடித்தார்.

அதே நேரத்தில் மூதறிஞர் ராஜாஜி ஆத்திகர். ஆத்திகவாதி -- அவரும் நேருவைப் போலத்தான் மடாலயங்களுக்குச் சென்றதில்லை. யார் காலிலும் விழுந்ததில்லை. ஆலயங்களுக்குக் கூட ராஜாஜி சென்றதில்லை.

காரணம் என்ன? நாம் மதச் சார்பற்ற கொள்கையைப் பேசுகிறோம். சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு மதச்சார்பற்ற தன்மைதான். அதற்கு மாறாக நாமே நடந்து காட்டினால் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு ஊனப்படும், என்ற காரணத்தினாலேதான் ஆசியாவின் ஜோதி, இந்த அகண்ட பாரதத்திற்கு பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு எந்த ஆலயங்களுக்கும் சென்றதில்லை. யாருடைய அடியையும் தொழுததில்லை. யாருடைய பாதாரவிந்தகங்களிலும் விழுந்து பாதபூஜை செய்ததில்லை. சாய்பாபாவைக் கண்டதில்லை. காஞ்சி சங்கராச்சாரியாரை தரிசித்ததில்லை.

ஆனால், இன்றைக்கு ஜனாதிபதி, பிரதமர் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு அந்தக் காரியங்களை செய்வது மாத்திரம் அல்ல; அதை மக்கள் கண்களுக்குத் தெரியாமல் மறைக்கவும் கவலைப்படாமல் தொலைக்காட்சியில் படமெடுத்து அந்தக் காட்சியை – சாஷ்டாங்கமாக காலில் விழுந்து ஜனாதிபதி எழுந்திருக்கும் வரையில் காட்டுகிறார்கள் என்றால், உள்ளபடியே கேட்கிறேன்; இது மதச்சார்பற்ற தன்மைக்கு அடையாளமா?

## பேசும் கொள்கையைச் செயலிலும் பின்பற்றுவோர் நாம்

அதைப் போலவேதான் சாதிச் சார்பற்ற அந்தக் கொள்கையில் நரசிம்மராவானாலும் அல்லது இங்கே இருக்கிற அ.தி.மு.க. ஆட்சியினுடைய தலைவர் முதல்வர் ஜெயலலிதாவானாலும் எதைக் கடைப்பிடிக்கிறார்கள்? இங்கே அம்மையார் சத்தியவாணிமுத்து பேசும்போது கேட்டுக் கொண்டிருந்தேன்; கலப்பு மணங்களைப்பற்றிப் பேசினால் மட்டும் போதாது. செயலிலே காட்ட வேண்டும் என்று சொன்னார்கள். செயலிலே காட்டிவிட்டுத்தான் சாதிச் சார்பற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்று நாங்கள் பேசுகிறோம். என்னுடைய வீட்டிலும்

சரி; நம்முடைய பொதுச்செயலாளர் பேராசிரியர் வீட்டிலும் சரி; கலப்புத்திருமணம் செய்துகொண்ட மணமக்கள்தான் எங்களுடைய பிள்ளைகளாக, பெண்களாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. எனவே, சொல்வதுபோல் நடந்து காட்டுகின்ற – மற்றவர்களுக்கு வழி காட்டுகின்ற தலைமையை இந்த இயக்கம் பெற்றிருக்கின்றது.

தி.மு.கழகத்தில் சமூக நீதி எந்த அளவுக்கு – இன்று நேற்றல்ல; முத்தையா முதலியார் காலத்திலேயிருந்து, நீதிக் கட்சி காலத்திலேயிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதையும் அந்த சமூகநீதியின் மீது நம்பிக்கை இருக்கிற காரணத்தினாலேதான் தேசிய முன்னணி ஆட்சியில் நாம் அங்கம் வகித்த போதும் சரி, தேசிய முன்னணி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேசிய முன்னணி அமைக்கப்பட்டபோதும் சரி மண்டல் கமிஷன் பரிந்துரையை ஒரு கொள்கையாக ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை தி.மு.கழகம் வலியுறுத்தியது.

## மண்டல் கமிஷன் உருவான வரலாறு

இன்னும் உங்களுக்குச் சொல்லவேண்டுமேயானால்; மண்டல் கமிஷன் உருவானதற்கான வரலாற்றை தெரிவிப்பது என் கடமை.

1973ஆம் ஆண்டு நான் தமிழக முதல்வராக இருந்தபோது, அலகாபாத்தில் பிற்படுத்தபட்டோர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு என்னை வருமாறு அழைத்தவர் ராஜ்நாராயணன். "ஒவ்வொரு மாநிலத்திலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு – கல்வியில் – வேலை வாய்ப்பில் இருப்பதைப்போல, மாநில அரசு மட்டத்தில் இருப்பதைப் போல மத்தியஅரசிலும் அந்த இட ஒதுக்கீடு உரிமை வந்தாக வேண்டும். அதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்ற கருத்தை அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் நான் எடுத்துச் சொன்னேன். ராஜ் நாராயணன் முன்னின்று நடத்திய மாநாடு அது.

பிறகு 77ல் மொரார்ஜிதேசாய் தலைமையில் உருவான ஜனதா கட்சி ஆட்சியில் ராஜ்நாராயணனும் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த காலகட்டத்தில் பிரதமராக பொறுப்பேற்ற மொரார்ஜிதேசாய் மண்டல் கமிஷன் அமைத்தார். மண்டல் கமிஷன் பரிந்துரைகள் வரப்பெற்றன. ஆனால் ஜனதா ஆட்சி கவிழ்ந்து இந்திரா காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகு 10 ஆண்டுக் காலம் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் பற்றிய சிந்தனையே யாருக்கும் இல்லை. அது கிடப்பிலே போடப்பட்டது. தரப்பட்ட அறிக்கையை ஏறெடுத்துப் பார்க்க யாரும் இல்லை.

1990ஆம் ஆண்டு வி.பி. சிங் அவர்கள் தலைமையில் தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே – தேசிய முன்னணி ஆட்சி அங்கே! நாம் தமிழக சட்டப்பேரவையில் – "மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும்" என்று வி.பி.சிங் அவர்களை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலேதான் வி.பி.சிங் அவர்கள் "மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்" என்று அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்தபோதும் ஒன்றைச் சொன்னார்கள். "இந்த மண்டல் கமிஷன் பற்றிய விபரங்களை ஒவ்வொரு மாநிலஅரசும் எனக்குத்தர வேண்டும் என்று எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினேன். எந்த முதலமைச்சரும் பதில் எழுதவில்லை. ஒரே ஒரு முதலமைச்சர்தான் அதைப் பற்றிய விபரங்களை எல்லாம் எனக்கு அனுப்பி வைத்தார். அவர்தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி" (பலத்தக் கைதட்டல் – ஆரவாரம்) என்று வி.பி. சிங் குறிப்பிட்டார்.

அதன் காரணமாகவே வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அந்த நேரத்தில் 'இந்தியா டுடே' பத்திரிகைகூட எழுதியது. "வி.பி.சிங் அவருடைய நண்பரால் கெட்டுப்போய்விட்டார்!" என்று. என்ன கெட்டுப் போய் விட்டார்? மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம் அல்லவா, அதனால்தான் ஆதிக்கச்சக்திகள் அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டார்கள் அல்லவா. எனவே அவருடைய நண்பரால் வி.பி. சிங் கெட்டுப்போய் விட்டார் என்று எழுதினார்கள்.

## ஆட்சியைப் பற்றி கவலைப்படாமல் வி.பி.சிங்குக்கு அளித்த ஆதரவு

வி.பி. சிங் – ஆட்சியை இழந்தபொழுது அவர் ஒரு சிறந்த கொள்கைக்காக – சமூகநீதிக் கொள்கைக்காக ஆட்சியை பறிகொடுத்தார் என்ற காரணத்திற்காக அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த தி.மு.கழகம் என் தலைமையில் வி.பி.சிங் அவர்களுக்கு சென்னையிலிருந்து குமரிவரை சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்தது. வழியெல்லாம் பாராட்டு விழாக்கள். இந்த திருச்சி மாநகரத்திலே கூட பெரும் விழா நடத்தப்பட்டது. மதுரையில் விடியற்காலையில் 4 மணிக்கு மேலும் தொடர்ந்தது அந்த விழா! இலட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தார்கள். அப்போது வி.பி.சிங் பேசினார்! "என்னுடைய ஆட்சி சமூகநீதியை காரணம்காட்டி கவிழ்க்கப்பட்டவுடன் என்னோடு இருந்தவர்கள் எல்லாம் போய் விட்டார்கள் (அவருக்கும் என்னுடைய கதை தான்) ஆனால் என்னோடு இருந்தால் பிரச்சினைகள் வரும்; தன்னுடைய ஆட்சிக்கும் ஆபத்து வரும் என்று தெரிந்தும் கூட கருணாநிதி என்னோடு இருக்கிறார். இதுதான் சமூகநீதியில் அவருக்கும் எனக்குமுள்ள உறுதியான பிடிப்புக்கு அடையாளம்" என்று வி.பி.சிங் எடுத்துக் காட்டினார். (பலத்த கைத்தட்டல்)

## கழகஆட்சியில் இடஒதுக்கீடு மொத்தம் 69 சதவிகிதம்!

91ஆம் ஆண்டுவரையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், நீதிக்கட்சியினுடைய தலைவர்களும், இடையிடையே பெருந்தலைவர் காமராசரும் பேணிக்காப்பாற்றி வளர்த்த – கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திய இந்த இட ஒதுக்கீடு; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று இருந்த இந்த 'Reservation' இட ஒதுக்கீடு – 91ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்தக் கோரிக்கைக்காக அன்று வாதாடியவர்களை, தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தை விட்டு அழைத்து வரச்சொல்லி என் வீட்டிலே உட்காரவைத்துப்பேசி, டாக்டர் ராமதாஸ் போன்றவர்களிடத்திலே விவாதித்து மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதம் இட

ஒதுக்கீடு என்று அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் 30 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஏற்கெனவே 16 சதவிகிதம் என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருந்தது. அதை 18 ஆக ஆக்கினோம். மீண்டும் இன்னொரு சதவிகிதம் அதிகமாக்கி பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதம் ஒதுக்கி 19 சதவிகிதம் – ஆக மொத்தம் 91ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி கலைக்கப்படுகிறவரையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பெற்ற இட ஒதுக்கீட்டு உரிமை 69 சதவிகிதம்.

## 50 சதவிகிதமாக ஆக்கிவிட்ட அ.தி.மு.க. அரசு!

ஆனால் இன்று இருக்கிற இந்த ஆட்சியில் 69 சதவிகிதம் இல்லை. 50 சதவிகிதம்தான். உச்சநீதிமன்றத்தில் வாதாடவேண்டிய முறையில் வாதாடாததால் அது 50 சதவிகிதமாக சுருங்கி விட்டது. இங்கே திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் வீரமணி அவர்கள் தயாரித்துக் கொடுத்த ஒரு சட்டம் – அந்தச் சட்டத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்றி – அது நிறைவேற்றப்பட்டவுடன் அதை அரசியல் சட்டத்தில் இணைக்க வேண்டும் – 9வது அட்டவணையில் இணைக்க வேண்டும் என்பதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப்பெற்று இணைத்தப் பிறகும் கூட, உச்சநீதிமன்றத்தில் இந்த 69 சதவிகிதம் செல்லாது என்று வழக்கு வந்தபோது "நாங்கள் இதை அரசியல் சட்டத்திலே இணைத்திருக்கிறோம்!" என்ற செய்தியை தமிழ்நாடு சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் எடுத்துரைக்காத காரணத்தால் வேண்டுமென்றே அந்தநிலை ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் உருவாக்கப்பட்ட காரணத்தால் 69 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த உரிமை ஐம்பதாக இன்றைக்கு ஆகியிருக்கின்றது. ஆனாலும் சொல்கிறார்கள், 50 அல்ல 69 தான் என்று ஊரையும் ஏமாற்றுகிறார்கள், உங்களையும் ஏமாற்றுகிறார்கள் – ஒடுக்கப்பட்ட மக்களையும் ஏமாற்றுகிறார்கள்.

தி.மு.கழகத்தின் கோரிக்கை 69 சதவிகிதம் அல்ல; ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எத்தனை சதவிகிதம் அவர்களுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று நிர்ணயிக்கின்ற உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கு ஏற்படுகின்றவகையில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதுதான் தி.மு.கழகத்தின் கோரிக்கையாகும்.

நான் இவ்வளவு நேரம் பேசியது தியாகராயர் 1917ஆம் ஆண்டில் சென்னை மாநாட்டில் பேசிய பேச்சை வைத்து Social Justice மதச்சார்பற்ற, சாதிச் சார்பற்ற தன்மை, இந்த அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

1918ஆம் ஆண்டு திருச்சி மாநகரத்தில் பாரிஸ்டர் தங்கவேலு பிள்ளை ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களை சொல்லவேண்டுமானால், அவர் சொல்கிறார்,"அசோகர், அக்பர், சந்திரகுப்தர் இவர்கள் காலத்திலேகூட, அதை எதிர்த்து சுதந்திரமாக ஆட்சி புரிந்தவர்கள், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அவர்களது வழிவந்தவர்கள்தான் தமிழர்கள்" என்று குறிப்பிட்டாரே, அதை ஒட்டி பிறந்ததுதான் "நான் தமிழன், நான் யாருக்கும் அடிமைப்பட்டவன் அல்ல; அடிமைப்படவும் மாட்டேன்" என்கின்ற அந்த உணர்வு.

இன்னும் சொல்லவேண்டுமேயானால், பாகிஸ்தான் பிறப்பதற்கு முன்பே, பிறந்த கோரிக்கை, 'தமிழ்நாடு தமிழருக்கே', 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கை அப்படிப் பிறந்த கோரிக்கைக் கூட நான் பிறந்த திருவாரூரில் நடைபெற்ற மாநாட்டில்தான் பிறந்தது. 40ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். அந்த மாநாட்டில் நான் தொண்டர்படையிலே ஒருவன், தொண்டர் படைத்தலைவர் ராஜகோபால் என்பவர் அவருடைய தலைமையிலே தொண்டு புரிந்த தொண்டர்களிலே ஒருவன் நான். திராவிட நாடு திராவிடருக்கே' என்று பெரியார் தீர்மானம் நிறைவேற்றிய அந்த மாநாட்டில் தொண்டனாக இருந்து மாநாட்டுப் பணிகளைக்கவனித்துக் கொண்டிருந்த கருணாநிதிதான் இன்றைக்கு இந்த மாநில மாநாட்டில்

உங்கள் முன்னால் தலைவனாக நிற்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள்! (பலத்த கைதட்டல்) ஏறத்தாழ, 50 ஆண்டுகளுக்குமுன் நடந்த அந்த மாநாட்டிலேதான் பாகிஸ்தான் பிரிவினைக்கோரிக்கைக்கு முன்பே பிறந்த கோரிக்கையான 'தமிழ்நாடு தமிழருக்கே' – 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கை பிறந்தது.

## கழக ஆட்சியில் மாநிலசுயாட்சி தீர்மானம்

ஆனால் அந்த பிரிவினைக் கோரிக்கையை பேரறிஞர் அண்ணா 62ஆம் ஆண்டு கைவிட்டார். அவர் ஒருவராக அந்தப் பிரிவினைக் கோரிக்கையை கைவிடவில்லை. கழகத்தினுடைய பொதுக்குழுவைக் கூட்டி, காரணகாரிய விளக்கங்களைச்சொல்லி; இந்தக் கழகம் காப்பாற்றப்படவேண்டும், கழகம் காப்பாற்றப்பட்டால்தான் தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும் என்ற அந்த அடிப்படையிலே 62ஆம் ஆண்டு அந்தக் கோரிக்கையை கைவிட்டார். அப்படிக் கைவிட்டாலும் கூட, அண்ணாவின் கருத்தை ஏற்று இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதே 'மாநில சுயாட்சி' தீர்மானம் – அந்த மாநில சுயாட்சியைப் பெற தி.மு.கழகம் ஒரு குழுவை அமைத்தது. அந்தக்குழு ராஜமன்னார் தலைமையில் துணைவேந்தராக இருந்த லட்சுமணசாமி முதலியார், நீதிபதியாகப் பணியாற்றிய சந்திராரெட்டி – ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை தி.மு.கழக ஆட்சி 69ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்தபோது அமைத்து அண்ணாவின் கருத்தை நிறைவேற்ற, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் உள்ள அதிகாரங்கள் எப்படி பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்ற அறிக்கையைத் தாருங்கள் என்று கேட்டு அவர்கள் தந்த அறிக்கைக்குப் பெயர்தான் 'ராஜமன்னார் குழு அறிக்கை' ஆகும்.

அந்த அறிக்கையை அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையாருக்கு அனுப்பிவைத்தேன். அதைப்படித்துப் பார்த்துவிட்டு இந்திராகாந்தி அம்மையார் எனக்கு பதில் எழுதினார்கள் "நீங்கள் அனுப்பியிருந்த அறிக்கை கிடைத்தது. இதைப்பற்றி இந்தியாவில் உள்ள எல்லா முதலமைச்சர்களுடனும் விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். எனவே உரிய நேரத்தில் விவாதிக்கலாம்" என்று சொன்னார்கள். "இந்த

அறிக்கை ஒரு குழுவின் அறிக்கை – இதுபற்றி உங்கள் அரசின் கருத்து என்ன? என்பதையும் தெரிவியுங்கள்!" என்று பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் எனக்குக் கடிதம் எழுதினார். உடனே மாறன், செழியன் இருவர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக்குழு இராஜமன்னார் அறிக்கையை ஆராய்ந்து ஒரு அறிக்கை தந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே தான் 1974ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நான் முன் மொழிந்தேன். தம்பி ஆலடி அருணா வழிமொழிந்துபேசி, மூன்றுநாள் விவாதம் நடந்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கூட்டாட்சி என்பதற்கு சரியான பொருள்!

முதன் முதலாக இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 1974ஆம் ஆண்டு – மாநில சுயாட்சித் தீர்மானம்! மாநில சுயாட்சித் தீர்மானத்தின் தாத்பரியம் என்ன? 'Autonomy for the states' மாநிலங்களுக்கு சுயாட்சி 'Federalism at the centre' மத்தியிலே கூட்டாட்சி – இந்தக் கூட்டாட்சியை சிலபேர் குழப்பிக் கொள்கிறார்கள். கூட்டாட்சி என்றால் 'கூட்டணி ஆட்சி' என்று கருதிக் கொள்கிறார்கள். கூட்டாட்சி என்பதற்கு சரியான பொருள்; 'Federal system - Federalism' அதுதான். கூட்டாட்சி வேறு; கூட்டணிகள் நடத்துகிற ஆட்சி வேறு!

இது Joint Government அல்ல; Joint Rule அல்ல! Joint Rule வேறு! Federalism வேறு! "மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி" என்பது கட்சிகளெல்லாம் ஒன்றுகூடி தேர்தலில்நின்று அந்தக் கட்சிகளெல்லாம் ஒரு ஆட்சி அமைப்பது என்பது அல்ல! மத்தியில் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு மாநிலங்களுக்கு அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டு மாநிலங்களும் தன்னால் இயங்கக்கூடிய அந்த உரிமையைப்பெறவேண்டும்.

## அதிகாரங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

உதாரணம் சொல்ல வேண்டுமேயானால்; பள்ளிக்கூடங்களில் விழாக்களில் மாணவிகள் பின்னல் கோலாட்டம் என்ற ஒரு கோலாட்ட விளையாட்டை நடத்துவார்கள். அதில் பத்துப்பதினைந்து கயிறுகள் இருக்கும். ஒவ்வொரு கயிறின் நுனியிலும் ஒவ்வொரு மாணவி பிடித்தபடி கோலாட்டக் கழியோடு நின்றுகொண்டு நடனம் புரிவாள். அந்தப் பத்துப் பதினைந்து கயிறுகளின் மொத்த முடிச்சும் மேலே இருக்கும். மேலே முடிச்சு இருக்கும். முடிச்சு முடிபோட்டு இருக்கும். ஆனால் கயிறுகள் தனித்தனியாக சுதந்திரமாக இருக்கும். அந்தக் கயிறுகளைப் பிடித்துக்கொண்டு நடனம் ஆடுவார்கள். அவர்கள் இந்த கயிறுகளை எல்லாம் ஒன்றாகச் சேர்ப்பார்கள். பின்னுவார்கள். பின்னர் அந்தப் பின்னலைஎடுத்துவிட்டு மக்களிடத்தில் கையொலியைப் பெற்று பாராட்டுக்களைப் பெறுவார்கள்.

## பலமான இந்தியாவுக்கு அடித்தளம் மாநிலசுயாட்சியே

மேலே இருக்கின்ற அந்த முடிச்சுப் போல சின்ன முடிச்சாக, சின்ன முடியாக மத்திய அரசின் அதிகாரம் இருக்க வேண்டும். பரவிக்கிடக்கின்ற கோலாட்டத்திற்கான கயிறுகளைப்போல மாநிலங்களின் அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்பதுதான் மத்தியிலே கூட்டாட்சி – மாநிலத்தில் சுயாட்சி என்பதற்கான உண்மையான விளக்கமாகும். (பலத்த கைத்தட்டல்) இந்த சுயாட்சி – இன்றைக்குச் சொல்லப்படுகிறதே காஷ்மீருக்கு தரப்படுவதைப்போல இந்தியாவில்உள்ள எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி தரப்பட்டாகவேண்டும் என்றகருத்தை நான் இந்த மாநில மாநாட்டில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையானால் இந்தியாவில் பல காஷ்மீர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் (பலத்த கைதட்டல்) காஷ்மீர் கேட்பது மாநில சுயாட்சி அல்ல. காஷ்மீரிலே உள்ள மக்கள் வேறுவிதமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியா தருவதாகச் சொல்வது மாநில சுயாட்சி. காஷ்மீருக்கு தருவதாகச்

சொல்கிற அந்த அளவிற்கு மாநில சுயாட்சியை இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்கும் மத்திய அரசு தந்தாகவேண்டும், தருவதற்கு முன்வந்தாகவேண்டும், இல்லாவிட்டால் காஷ்மீர் சந்தித்ததுபோன்ற நிலைமைகள் பல இந்தியாவில் உருவாகக் கூடும் என்று மத்திய அரசை எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாநில சுயாட்சி வழங்கப்பட்டால்தான் பலமான இந்தியாவுக்கு அடித்தளம் அமைக்கப்பட முடியும் என்பதை நான் சொல்கிறேன். கேட்கலாம், மாநிலசுயாட்சி இல்லாதபோதே, தமிழ்நாடு இந்த பாடுபடுகிறதே, மாநிலசுயாட்சியும் கொடுத்துவிட்டால் எப்பாடுபடுமோ என்று கேட்கலாம். ஜெயலலிதா ஆட்சியில் மாநில சுயாட்சி இல்லை; மத்தியில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. அப்படி குவிந்து கிடந்தும்கூட இங்கே ஜெயலலிதா செய்கின்ற அராஜகங்களை மத்திய அரசால் தடுக்கமுடியவில்லை. கிராமத்திலே சொல்வார்கள்; இங்கே அன்பில் இருந்தால் சொல்வார் அழகான பழமொழி,

"அறுக்க மாட்டாதவன் கையிலே ஐம்பத்திரரெண்டு அருவாள்" என்று

அதுபோல, நரசிம்மராவ் கையில் நூற்றுக்கணக்கான அருவாள் பயன்படுத்தப்பட முடியாமல் துருப்பிடித்துக் கிடக்கின்ற அருவாள்கள் அவை. ஆயுதங்கள் அவை.

மாநிலத்தில் நடைபெறுகின்ற ஆட்சி ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்காக அந்தக் கொள்கையை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. நரசிம்மராவ் ஆட்சியும் ஒழுங்காக நடைபெறவில்லை. ஜெயலலிதா ஆட்சியைப்போல ஊழல் ஆட்சிதான் நரசிம்மராவ் ஆட்சி. அதற்காக சுதந்திரத்தையே நாம் குறைவுபடுத்திவிட முடியுமா? முடியாது.

## ஆட்சியின் குறைகள் வேறு; கொள்கை வேறு!

சுதந்திரம் பெறுகையில் நல்லாட்சி அமைப்போம் என வெள்ளைக்காரனை விரட்டினோமே; சுதந்திர ஆட்சியில் எவ்வளவு ஊழல்கள்? நரசிம்மராவின் காங்கிரஸ் ஆட்சி செய்து கொண்டிருக்கிறதே

– எனவே இந்த சுதந்திரமும் வேண்டாம், மண்ணாங்கட்டியும் வேண்டாம் என சுதந்திரத்தை வெள்ளைக்காரனை அழைத்து அவனுடைய பையிலே போட்டுவிட முடியுமா? முடியாது!

அதைப் போலத்தான் மாநிலத்தில் எவ்வளவு நடைபெற்றாலும் கூட அதைமாற்றி அமைக்கின்ற திறமை, சக்தி, வல்லமை, உரிமை, மாநில மக்களுக்கு உண்டு. அதை மாற்றிஅமைத்தே தீருவோம். மாநில சுயாட்சித் தீர்மானத்தை 1974ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் நிறைவேற்றியபோது டாக்டர் ஹண்டே என்ற உறுப்பினர் சொன்னார். அவர் அப்போது அ.தி.மு.க.காரர். முஸ்லீம் லீக் தவிர பாக்கி எல்லாக்கட்சிக்கும் போனவர். அவர் சொன்னார் "மாநிலசுயாட்சி கொள்கையிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் கருணாநிதி தலைமையில் இருக்கிற தி.மு.க. ஆட்சிக்கு மாநிலசுயாட்சி தரக்கூடாது; மாநிலசுயாட்சியை நீங்கள் துஷ்பிரயோகம் செய்வீர்கள்" என்று சொன்னார்.

அப்போது நான் சொன்னேன்; "ஹண்டே அவர்களே, தி.மு.க. ஆட்சியில் குறைகள் இருந்தால் சொல்லுங்கள்; குற்றங்கள் இருந்தால் சொல்லுங்கள் திருத்திக் கொள்கிறோம்; விளக்கமளிக்கிறோம் அதற்காக அண்ணா சொன்ன கொள்கைகளை குழப்பாதீர்கள் என்று சொல்லிவிட்டு சொன்னேன் "ஒருவேளை நீங்களே – எதிர்காலத்திலே அ.தி.மு.க.வே ஆட்சிக்கு வந்து, அப்போது நீங்கள் மாநில சுயாட்சி கேட்டால் அதை ஆதரிக்கிற முதல்ஆளாக இந்த கருணாநிதிதான் இருப்பான்" என்று நான் அன்றைக்கு சட்டசபையிலே சொன்னேன்.

எனவே கொள்கை வேறு; ஒரு ஆட்சியின் குறைகள், குற்றச்சாட்டுகள், இவைகளெல்லாம் வேறு! அதற்காக கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது. எனவே தான் திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலசுயாட்சிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது. அதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையிலேதான் இந்த மாநாட்டு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியைப்பற்றிக் குறிப்பிட்டேன். இந்த ஆட்சியில் மத்தியிலே வழங்கப்படுகின்ற, இதுவரை அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டாவது தமிழகத்தை வளப்படுத்தியிருக்கிறார்களா, தமிழகமக்களை வாழ வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் பதில்.

## தமிழகத்தில் தொழில் வளர்ச்சி வீழ்ச்சியுற்ற காரணம்

தி.மு.கழக ஆட்சியில் தமிழ்நாட்டில் தொழில்வளம் 3வது 4வது இடத்தில் இருந்தது. இன்றைக்கு 13 அல்லது 14வது இடத்திற்கு வந்துவிட்டது. கடந்த ஆண்டு பிசினெஸ் இண்டியா (Business India)வில் காணப்பட்ட ஒரு கட்டுரையின் வாசகங்களை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.

Says one well known industrialist: "We don't mind corruption; so long as it delivers the goods. In the case of the ADMK Government the irritant is that it fails to honour its commitments for which we have already paid a fee".

Says one Madras based industrialist: "You need not cultivate every Tom, Dick and Harry. If you can please the presiding deity, your interests are taken care of : But if you fail out of favour your life is in a mess".

Jayalalitha's whimsical behaviour has reportedly put off several major Industrial houses.

எந்த ஒரு காரியம் நடைபெற வேண்டுமென்றாலும் அதற்கு லஞ்சம் தர வேண்டுமென்பது எங்களுக்கு தெரிந்த ஒன்றுதான். இந்த ஆட்சியில். ஆனால் அ.தி.மு.க. அரசைப் பொறுத்தவரை எரிச்சலூட்டும் நிலைமை என்னவென்றால் நாங்கள் லஞ்சம் கொடுத்தால்கூட எந்தக் காரியமும் நடைபெறவில்லை என்பதுதான் என்று ஒரு பிரபல தொழிலதிபர் சொல்கிறார் என்பதாக "Business India" சொல்கிறது. சென்னை

தொழிலதிபர் ஒருவர் அ.தி.மு.க. அரசில் எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. தலைமைப் பொறுப்பிலிருக்கும் நபரை திருப்திப்படுத்தினாலே நினைத்த காரியம் முடிந்துவிடும். ஆனால் அப்படி திருப்திப்படுத்தியும் காரியம் நடைபெறாமல் போனால் பெரும் சிக்கல்தான் என்று ஒரு முதலாளி கூறியிருக்கிறார்.

இப்படி முதலமைச்சர் ஜெயலலிதாவின் விசித்திரமான போக்குக் காரணமாக பல பெரும் தொழிற்சாலைகளை தமிழ்நாடு இழந்துவிட்டிருக்கிறது என்று "Business India" எழுதிக் காட்டுகிறது.

## இடம் மாறிய தொழிற்சாலைகள்

அது மாத்திரமல்ல **95**ஆம் ஆண்டு ஒரு பொருளாதார வல்லுநர் தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியைப்பற்றி பேசுகிற நேரத்திலே சொல்கிறார். அவருடைய பெயர் எஸ்.எல். ராவ் தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கவுன்சில் தலைமை இயக்குநர் அவர் சொல்கிறார் தமிழக ஆட்சியாளர்கள் தொழில்களைத் தொடங்குவதற்கு, தொழிலதிபர்களை ஈர்க்கின்ற முக்கியத்துவத்தை உணர்ந்து போதிய ஆர்வம் காட்டாததால் பொருளாதாரத் துறையிலும் மனிதவளத்துறையிலும் தமிழ்நாடு மிகுந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்கிறார். இன்னொன்றையும் சொல்கிறார். பல்வேறு காரணத்தினால் வெளிப்படையாக தங்கள் உணர்வுகளைக் கூற விரும்பாத தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு நிலைகளிலும் நிலவி வரும் ஊழல், கொள்கை முடிவெடுக்கும் நிலைமையில் இருந்துவரும் ஆர்வம் இல்லாமை ஆகியவற்றால் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதுகுறித்து கவலைத்தெரிவித்து வருகின்றார்கள் என்றும் சொல்கின்றார். இதற்கு உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கம்ப்யூட்டர் தொழில் பெங்களூரிலே பெருமளவுக்கு வளர்ந்திருக்கிறது அந்த கணிப்பொறித்தொழில் எந்தஅளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால் அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள 'சிலிகான் வேலி'க்கு அடுத்ததாக பெங்களூரில் கம்ப்யூட்டர் தொழில் வளர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் வல்லுநர்கள் பலர் அங்கே சென்றுகொண்டிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல அந்த தொழில்கள் இங்கே வர லஞ்சப்பணம் கேட்கப்பட்டது. எனவே அந்த தொழில் பெங்களூருக்கு போய் விட்டது. டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் என்ற ஒரு தொழில் நிறுவனம் அதனுடைய வருவாய் நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆண்டு வருவாயை விட அதிகம் உடைய தொழில். அந்தத் தொழில் டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் என்ற தொழில் இங்கே வருவதற்கு அனுமதி கேட்டபொழுது அ.தி.மு.க. அரசு அவர்களிடத்திலே கேட்ட லஞ்சத்தொகை 10 கோடி ரூபாய்! வேண்டாமென்று பெங்களூர் போய் விட்டார்கள்.

சிங்கப்பூர் காரிடார் இது பரவலாக பத்திரிகையிலே பேசப்படுகிற ஒரு தொழில். சிங்கப்பூர் காரிடார் என்பது காரிடார் என்றால் தாழ்வாரம்.

## தொழில் தொடங்க வருவோரிடம் இலஞ்சம் கேட்கும் அரசு

சிங்கப்பூரிலே உள்ளவர்கள், தமிழகத்திலே நிலத்தைப் பெற்று அங்குள்ள தொழில்களுக்கு இணைத்தொழிலாக ஒரு தொழிலை உருவாக்கவும் – அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளதுமான ஒரு தொழிலை அமைக்க முன்வந்தார்கள். அவர்களுக்கும் அதே நிலைதான். அவனவன் தன்னுடைய மாநிலத்திற்கு தொழில் வராதா? – என்று ஏங்கிக் கொண்டிருக்கும்பொழுது; தொழிலைக் கொண்டுவருகிறேன் என்று சொல்கிறவர்களைப்பார்த்து "எவ்வளவு லஞ்சம் கொடுப்பாய்? பத்து கோடியா? இருபது கோடியா?" என்று கேட்கின்ற அரசு தமிழ்நாட்டிலே இருந்த காரணத்தினாலேதான் இன்றைக்கு சிங்கப்பூர் காரிடார் இங்கில்லை பெங்களூர் போய்விட்டது.

இப்பொழுது ஜெயலலிதா வாருங்கள் வாருங்கள் என்று வருந்தி வருந்தி அழைக்கிறார். திருச்சி சுவர்களிலே பார்க்கிறேன். காலையிலே தம்பி ராஜேந்தர் சொன்னதைப்போல அம்மா அழைக்கிறார்! அன்னை அழைக்கிறார்! பாரதத்தாய் அழைக்கிறார்! ஜெயலலிதா அழைக்கிறார்! என்று உங்களைத்தான் அழைக்கிறாரே தவிர, தொழில் செய்ய வருகின்ற யாரையும் ஜெயலலிதா அழைக்கவில்லை. எப்படி அழைக்கிறார் தெரியுமா? "என்ன கொடுப்பாய் எனக்கு?" என்று கேட்க அழைக்கிறார். "தொழில் வளம் பெருக்க வருகிறாயா? தமிழகத்தை தொழில் சொர்க்கமாக்க வருகிறாயா? அப்படியானால் எனக்கு ஐந்து கோடி தருவாயா? பத்து கோடி தருவாயா?" என்று கேட்டு அவர்களை விரட்டி விடுகிறார்.

அந்த மாய்மாலத்தை எல்லாம் மறைத்து உங்களை வாருங்கள், வாருங்கள் என்று அன்னை அழைக்கிறார். பாரதத்தாய் அழைக்கிறார். காவிரித்தாய் அழைக்கிறார். இவைகளையெல்லாம் பார்த்து ஆச்சர்யப்பட்டேன் என்று தம்பி ராஜேந்தர் பேசும்பொழுது சொன்னார் எனக்கு இதைப் பார்த்துக்கூட ஆச்சர்யமில்லை "காவிரித்தாய் அழைக்கிறார்" என்பதைப் பார்த்தபொழுதுதான் ஒரே ஆச்சர்யம். வறண்டு கிடக்கிறது காவிரி. இந்த அழகில் இந்த அம்மையாருக்குப் பெயர் காவிரித் தாயாம். அதுவும் இடையில் 'த்' போடவில்லை "காவிரி தாய்" என்று போட்டிருக்கிறார்கள்.

## மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறக்க லஞ்சம்!

வருகிற தொழிலதிபர்களை அனுமதிக்க விருப்பமில்லை. நாட்டமில்லை; தமிழர்களைப்பற்றிய கவலையில்லை. தமிழ்நாட்டில் தொழில்துறை பெருக வேண்டும். தொழிலாளர்களின் நலன் பெருக வேண்டும், அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறவேண்டுமென்கிற எண்ணமில்லை. அப்படி ஒரு ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

"ஸ்டான்டர்டு மோட்டார்" – அதனுடைய பிரச்சினைகளைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அதையும் எடுத்து நடத்த வேண்டுமென்று தி.மு.கழக ஆட்சியிலே அந்த தனி நபர்களிடத்திலே பல கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் பணிகள் நடைபெறவில்லை. மூடப்பட்டது. ஒரு என்.ஆர்.ஐ. வந்தார். நான் சொன்னால் தவறில்லை என்று கருதுகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் தா. பாண்டியன் அந்த என்.ஆர்.ஐ.யை அழைத்து வந்து "இவர் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறார். அவரை அனுமதியுங்கள்" என்று பாண்டியன் முயற்சி எடுத்தும் கூட அந்த என்.ஆர்.ஐ.யிடத்திலே இவர்கள் லஞ்சப் பணம் கேட்டார்கள். இதனால் அவர் போய் விட்டார். "உதவி செய்ய வந்தால் என்னிடத்திலே லஞ்சம் கேட்கிறாயா?" என்று கேட்டுவிட்டு அவர் போய்விட்டார்.

இப்படி தொழில் வளங்களை தங்களுடைய சுயலாபத்திற்காக – போயஸ் தோட்டத்திலே லஞ்சப் பணத்தைக் குவிப்பதற்காக பயன்படுத்திக் கொள்கின்ற ஒரு ஆட்சி நடைபெறுகிறது. லஞ்சம் இல்லாவிட்டால் தொழில்களைப் புறக்கணிக்கிற ஒரு ஆட்சி – ஊழல் நிறைந்த ஆட்சி இங்கே நடைபெறுகிறது.

தீர்மானக்குழுவினர் ஊழல்களைபட்டியலிட்டுக் காட்டி இருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நான் அதை மீண்டும் சொல்வது உங்கள் நினைவிற்காக. கவனமாக கேட்க வேண்டும்.

## அ.தி.மு.க. அரசு செய்துள்ள ஊழல் – இலஞ்ச விபரப் பட்டியல்!

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை முதலமைச்சர் பங்குதாரராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி, அரசை மோசடிசெய்து மிக மலிவான அடிமாட்டு விலைக்கு வாங்கியும்;

அரசுக்குச் சொந்தமான 'டாமின்' நிறுவனத்தை காமதேனுவாகப் பயன்படுத்தி கோடி கோடியாக கறுப்புப்பணம் ஈட்டியும்;

இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளை தயார் செய்யும் முதலாளிகள் கொள்ளைலாபம் அடிக்க, சலுகைகள் அளித்து கோடிக்கணக்கில் லஞ்சம் பெற்றும்;

நலிந்திருக்கும் கூட்டுறவு சங்கங்களையும், காதி அமைப்புக்களையும், மேலும் பாதிப்புக்குள்ளாக்குகிற அளவிற்கு, தனியார் நிறுவனமான பி அன் சி மில்லிற்கு 16 கோடி ரூபாய்க்கு மாணவர்களுக்கான பள்ளிச்சீருடை தயாரிக்க அனுமதி கொடுத்து, கையூட்டுப் பெற்றும்;

அரசின் 'டிட்கோ' பங்குகளை விதிகளை மீறி தனியாருக்கு விற்று கோடி கோடியாக லஞ்சம் பெற்றும்;

ஆம்னி பஸ்களுக்கான வரியினைக் குறைத்து, ஏற்கெனவே கூடுதலாக வசூலித்திருந்த வரியையும் திருப்பிக் கொடுத்து, தமிழக அரசை வருவாய் இழப்பிற்கு உள்ளாக்கி இதற்கு கைமாறாக 6 கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியும்;

ஒப்பந்தப் புள்ளி கோராமல், நெறிமுறைகளைப் பின்பற்றாமல் நேரு விளையாட்டரங்கை உருவாக்கிய வகையிலும், ட்ராக்ஸ் ஜீப்புகளும், விவசாயத்துறைக்கு ட்ராக்டர்கள் வாங்கிய வகையிலும் பல கோடி ரூபாய் முறைகேடாக சம்பாதித்தும்;

துணை மருத்துவக் கல்விக் கூடங்களுக்கு அனுமதி அளிப்பதில் மோசடி செய்தும், சமூக நலத்துறைக்கு மாத்திரைகள் வாங்கியதில் ஊழல் புரிந்தும்;

அந்நியச் செலாவணியில் 300 கோடி அளவிற்கு விரயம் ஏற்படுகின்ற வகையிலும், தவறான முறையில், டெண்டர் நிபந்தனைகளையும், தரக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தி தரக்குறைவான

நிலக்கரியை இறக்குமதிசெய்தும், நியாயத்திற்கும், சட்டத்திற்கும் புறம்பான இந்த நடவடிக்கையின் மூலம் பல கோடி ரூபாய் ஊழல் புரிந்தும்;

கொடைக்கானலில் தனியார் ஒருவரின் ஏழு அடுக்கு மாடி ஓட்டல் கட்டுவதன் தொடர்பான வழக்கு உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகள் விசாரணையில் இருக்கும்போது பல கோடி ரூபாய் லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு, வரம்புகளை மீறி, தளர்த்தி, அந்தத் தனியாருக்குச் சலுகைகள் செய்தும்;

மத்திய அரசு வழங்கிய நிதியில் கூட சுடுகாடுகளில் கொட்டகை அமைக்கும் பணியிலும் ஊழல் புரிந்து பல கோடி ரூபாய் மறைமுகமாக சம்பாதித்தும்;

கழக ஆட்சிக் காலத்தில் அரசுடைமையாக்கப்பட்ட ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை, அந்த அறக்கட்டளைக்குச் சொந்தமில்லாத, அரசுக்குச் சொந்தமான 122 ஏக்கர் நிலத்துடனும், 7 கோடி ரூபாய் அளவில் மருத்துவமனைக்கும், ஆராய்ச்சி மையத்திற்கும் கழக அரசால் வழங்கப்பட்ட உபகரணங்களுடனும் மீண்டும் அந்தத் தனியார் அறக்கட்டளையே ஏற்று நடத்திக்கொள்ளும் வகையிலும் அரசே அவர்களிடம் ஒப்படைக்கும் முடிவை எடுத்து, இதற்காக சுமார் 40 கோடி ரூபாய் லஞ்சமாகப் பெற்று பொதுப்பணித்துறையில் ஒப்பந்தங்களை வழங்குவதில் சம்பந்தப்பட்ட அமைச்சரே நேரடியாக தலையிட்டு ஒவ்வொரு ஒப்பந்தத் தொகையிலும் 10 சதவிகித கமிஷன் பெறும் வகையில் முதலமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் பெற்ற பல கோடி ரூபாய் லஞ்சமும்; –

## லஞ்சம் வாங்கித்தரும் ஏஜெண்டுகளாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்

இவைகள் எல்லாம் ஊழல் கடலில் ஒரு துளிதான் நான் உங்களிடத்திலே படித்துக்காட்டியது. இதில் முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் லஞ்சப்பணம் வாங்கித் தரும் ஏஜெண்டுகளாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே செயல்படுகிறார்கள். இந்த அக்கிரமத்தை

எங்காவது கேட்டிருக்கிறீர்களா? ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே லஞ்சம் வாங்கித்தருகிற கமிஷன் ஏஜெண்டுகள்.

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி – மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய செயலாளர் இன்பசாகரன். அழகான பெயர்தான். அந்த இன்பசாகரன் ஐ.ஏ.எஸ். வீட்டில் லட்சக்கணக்கான ரூபாய், வருமான வரித்துறையினர் கண்டுபிடித்து எடுத்தார்கள். அந்நியச் செலாவணி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. போலி மருந்துகளை வாங்கி அரசாங்கம் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்குகின்ற மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரையில் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

ஐ.ஏ.எஸ். அதிகாரி மத்திய சர்க்காருடைய பிடியில் உள்ளவராயிற்றே. அதற்கு நரசிம்மராவ்தான் என்ன நடவடிக்கை எடுத்தார்?

இன்னொரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தியானேஸ்வரன். அவருடைய வீட்டில் 16 கிலோ தங்கம். கேட்டால் சொன்னாராம், "என்னுடைய பாட்டி காலத்து நகைகள், என்னுடைய குடும்பத்தார் கொண்டுவந்த நகைகள். இவைகள் எல்லாம் தனித்தனியாக இருந்தால் காணாமல் போய்விடும் என்று உருக்கி ஒன்றாக்கி வைத்திருக்கிறேன்" என்று வருமானவரி இலாகாவினிடத்திலே சொன்னாராம். அப்படி ஒரு அதிகாரி – அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இவர்களுடைய வீட்டிலெல்லாம் 4 கோடி, 5 கோடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்றால் என்ன பொருள்? இங்கே 5 கோடி என்றால் ஜெயலலிதா வீட்டிலே 50 கோடி ரூபாய் இருப்பதாகப் பொருள். அங்கே 50 கோடி வாங்கிக் கொடுத்தால் அதில் பத்திலே ஒரு பகுதி கமிஷனைத்தான் தங்களுடைய வீட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஊழல்களிலேதான் 5 ஆயிரம் திருமணங்கள். அதுவும் விளம்பரம் செய்கிறார்கள். வேடிக்கையாக 5 ஆயிரம் பேருக்கு திருமணமாம். 5 ஆயிரம் பேருக்கு திருமணம் என்றால் 2500 ஜோடிகளுக்கா? 5 ஆயிரம் ஜோடிகளுக்கு திருமணம் என்றுகூடப்

போடவில்லை. 5 ஆயிரம் பேருக்கு திருமணம் என்று போடுகிறார்கள். (பலத்த கைதட்டல்) அதை நான் இழிவாகச் சொல்ல விரும்பவில்லை. அதைப் பற்றி நம்முடைய தோழர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். வளர்ப்பு மகனுடைய திருமணத்திற்கு பிராயச்சித்தமாக இத்தனை திருமணங்கள். 5 ஆயிரம் பேருக்குத் திருமணம் என்று யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?

நான் சொல்கிறேன் – 2 ஆண்டில் 35 ஆயிரம் ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைத்த கருணாநிதி கேட்கிறேன்; வளர்ப்பு மகனுக்கு திருமணம் செய்தீர்களே தத்தெடுத்தாயே அது யார்? தத்தி நடக்கும் குழந்தையையா தத்து எடுத்தாய்? 24 வயது வாலிபனை தத்தெடுத்தீர்கள்.

ஊரெல்லாம் சுயமரியாதைத் திருமணம் செய்து வைக்கிறீர்கள். உங்கள் வளர்ப்பு மகனுக்கு மாத்திரம் புரோகிதத் திருமணம் செய்து வைக்கிறீர்கள். என்ன சுயநலம் அது. புரோகிதத் திருமணம் செய்தால் நல்லது. பெரியார் முறையில் – அண்ணா முறையில் திருமணம் செய்தால் அறிவியக்கத் திருமணம் – செய்தால் தமிழ்த் திருமணம் செய்தால் ஏதாவது கேடுபாடு ஏற்படும் என்று பயப்படுகிறீர்கள். ஆனால் இந்த 5 ஆயிரம் பேரைப்பற்றி உங்களுக்குக் கவலையில்லை. உங்களுடைய ஒரே ஒரு வளர்ப்பு மகன் மாத்திரம் நன்றாக வாழ வேண்டும் என்று அவருக்கு மாத்திரம் புரோகிதத் திருமணமா? இதுதான் பரிணாம வளர்ச்சியா? இதுதான் திராவிட இயக்கத்தினுடைய, தந்தை பெரியாருடைய வழிவந்த பரிணாம வளர்ச்சியினுடைய அடையாளமா?

## ரூ.200 கோடி செலவில் திருமணம் நடத்தியதுதான் எளிமையா ?

ஒரு ரூபாய்தான் மாதச் சம்பளம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரே நீங்கள் சொன்னீர்கள். என்னுடைய நகை நட்டுக்களை எல்லாம் அடமானம்வைத்து தேர்தலில் நிற்கிறேன், எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்டீர்கள். இந்த ஏமாந்த தமிழகமும் வாக்களித்தது. வெற்றி பெற்றீர்கள். ராஜீவ்காந்தியினுடைய படுகொலையில் அந்த வீண்பழியை, அவதூறை எங்கள்மீது அள்ளிப் போட்டீர்கள். உங்களுக்குத் துணையாக

யார் யாரோ வந்து சேர்ந்தார்கள். ராஜீவ்காந்தி கொலைக்கு தி.மு.க.தான் காரணம் என்று சொன்னார்கள். அந்த அனுதாப அலையில் அன்றைக்கு வெற்றி பெற்றீர்கள். நான் ஆடம்பரமாக வாழ மாட்டேன். எளிமையானவள். எம்.ஜி.ஆரின் வாரிசு. அண்ணாவின் வாரிசு, பெரியாரின் மாணவி என்றெல்லாம் சொல்லிக்கொண்டு ஜெயலலிதா வளர்ப்பு மகன் திருமணத்தை 200 கோடி ரூபாய் செலவில் செய்தது நியாயம்தானா?

பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் வந்திருக்கின்றீர்கள். "கோலமயிலோடு வா துணை மயிலோடு வா என்று உடன் பிறப்புக்கு எழுதினேன். நீ துணைமயிலோடு மாத்திரமல்ல கோலமயிலோடு மாத்திரமல்ல. உன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையரோடும், பாட்டன் பாட்டியோடும் வந்திருக்கிறாய். கண்டேன், அறிந்தேன். நேற்றைக்கு நீ நடந்து வந்த அழகைப் பார்த்தேன். உன்னுடைய கம்பீரத்தைக் கண்டேன். உன்னுடைய பட்டாளத்து வீரநடையைக் கண்டு திகைத்தேன். (பலத்த கைதட்டல்) நன்றி சொல்ல 'நா' எழவில்லை. காரணம் தழுதழுத்தது எனக்கு. எப்படி உனக்கு நன்றி சொல்லமுடியும். உன் கால்களை முத்தமிடுகிறேன் என்று சொல்வதைத் தவிர வேறு நான் என்ன சொல்ல முடியும்? (பலத்த கைதட்டல்) துரைமுருகன் இரண்டு நாட்களாக படித்துப் படித்துக் காட்டுகிறாரே, நீடாமங்கலத்திலே இன்னாருடைய உடல்நிலை சரியில்லை. இன்னாருடைய மனைவி அபாய கட்டத்திலே இருக்கிறார். இன்னாருடைய தாயார் இறந்துவிட்டார். இன்னாருடைய தந்தைக்கு உடல்நலக் கேடு உடனே வரவும் என்று படித்துப் படித்துக் காட்டுகிறாரே. இவையெல்லாம் என்ன? எத்தனையோ எத்தனை உடன்பிறப்புக்கள், தாயை கவலைக்கிடமான நிலையிலே விட்டுவிட்டு, அண்ணன் அழைத்தாரே என்று ஓடோடி வந்திருக்கிறீர்கள். (பலத்த கைதட்டல்) எத்தனை உடன்பிறப்புக்கள் தன்னுடைய மனைவியின் உடல்நிலையைப் பற்றிக் கூட கவலைப்படாமல் ஓடி வந்திருக்கிறீர்கள். ஏன்? எந்த அண்ணன் உங்களை அழைத்தார்? தன்னுடைய மனைவி பத்மா சாகக்கிடக்கிற நேரத்தில் புதுக்கோட்டை கூட்டத்திற்குச் சென்று லாரியிலே திரும்பி வந்த போது மனைவியினுடைய பிணத்தைப்பார்த்த அந்தக் கருணாநிதி உனக்கு அண்ணனாக இருக்கிற காரணத்தால் அவர்

அழைத்தார் நீ வந்தாய். அப்படி தாயோடு, தந்தையோடு சகோதரிகளோடு மனைவி மக்களோடு வந்திருக்கின்ற, லட்சக்கணக்கில் குழுமியிருக்கிற உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

இருநூறு கோடி ரூபாய் செலவிலே திருமணம் நடத்திய ஒரு முதலமைச்சரை வேறு எங்காவது பார்த்ததுண்டா? தாய்மார்களே சிந்தியுங்கள். சிந்திப்பதோடு மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். இருநூறு கோடியாம் கருணாநிதி பொய்சொல்கிறார். இருநூறு கோடியிலே திருமணம் செய்யவில்லை. எல்லோரையும் போல சிக்கனமாகத் தான் செய்தேன் என்று ஜெயலலிதா சொல்கிறார். இவருடைய சிக்கனத்தின் லட்சணத்தை அந்தத் திருமணத்தில் சமையல் வேலை பார்த்த ஒருவரே சொல்கிறார். நான் இதை பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இவ்வளவு பெரிய கூட்டத்தை வீணாக்க விரும்பவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

## தலைமை சமையல்காரர் கொடுத்த பேட்டி

குமுதம் பத்திரிகையில் தியாகராஜ சர்மா என்ற ஒருவர் பேட்டி கொடுக்கிறார். யார் அந்த சர்மா தெரியுமா? சர்மா என்றதும் ஜனாதிபதி என்று கருதிவிடாதீர்கள். அவர்களெல்லாம் இன்னும் அந்த வேலைக்கு வரவில்லை. தியாகராஜ சர்மா ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணத்திற்கு சமையல்காரர் – சமையல்காரர்களுக்கு தலைவர். அவர் பேட்டிக் கொடுக்கிறார் குமுதத்திற்கு என்ன சொல்கிறார் தெரியுமா? அவருடைய பாஷையிலேயே படிக்கிறேன். "வளர்ப்பு மகன் திருமண சமையல் பொறுப்பு முழுவதையும் என் கிட்டதான் ஒப்படைச்சாங்க. நான் பத்து டிவிஷனா பிரிச்சு ஒவ்வொரு டிவிஷனுக்கும் சப் ஏஜெண்டுகளைப் பிடித்து முழு சமையல் பொறுப்பையும் கவனிச்சிக்கிட்டேன். மொத்தம் 3168 – பேரைக் கூப்பிட்டுக்கிட்டு வந்தேன். எத்தனை சமையல்காரர்கள் – 3168 பேர். வி.ஐ.பி. வி.வி.ஐ.பி. ஆகிய டிவிஷன்களை மாத்திரம் என்னோட மேற்பார்வையில் வைச்சுக்கிட்டேன். கல்யாணமெனுவில் மொத்தம் 27 அயிட்டங்கள். ஒண்ணேகால் லட்சம்பேருக்கு சமையல் பண்ணினேன்.

காய்கறி முழுவதும் கொத்தவால்சாவடியில் கிடைச்சுட்டுது. 400 மூட்டை அரிசி, செலவாச்சி எல்லாம் பொன்னிதான். வெஜிடபிள் பிரியாணி மட்டும் பாசுமதிரைஸ். ப்ரைடு ரைசுக்கும் பாசுமதிதான். அப்பளம் ஒரு லட்சத்துக்கு மேல் செலவாச்சு. காய்கறி நறுக்க மாத்திரம் 150 பேரை வைச்சேன். தேங்காய் 12 ஆயிரம் செலவாச்சு, 30 ஆயிரம் முருங்கக்கா, பீன்ஸ் 1500 கிலோ, உருளைக்கிழங்கு 1600 கிலோ, சர்க்கரை 100 மூட்டை ஆச்சு, போன்விட்டா கேக், வெனிலா கேக், மலபார் பாயசம், குலோப் ஜாமூன், அசோகா அல்வா, பூசணிக்கா அல்வா, கேசரி, கேரட் அல்வா – ஸ்வீட் போட்டோம்."

இதை நான் சொல்லவில்லை. குமுதம் பத்திரிகையிலே சமையல்கார தலைவர் தியாகராஜ சர்மா சொன்ன அதே பேட்டியைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேனே அல்லாமல் வேறல்ல.

## இதைவிடப் பெரிய ஊழலாட்சி மத்தியில் நடைபெறுகிறது

இப்படி நடைபெறுகின்ற ஊழல்களை மத்திய அரசு கண்டிக்கக் கூடாதா? என்று கேட்டால் புளிப்புக்கு லப்பன் என்பார்கள் கிராமத்தில்; அதுபோல இதைவிட பெரிய ஊழல்களைச் செய்கின்ற அரசாங்கம், இன்றைக்கு மத்தியில் இருக்கிற நரசிம்மராவ் அரசு. புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்தும் தாராளமயமாக்குவதிலே ஏற்பட்டுள்ள விளைவுகளைப்பற்றியும் இந்த மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அந்த புதிய பொருளாதாரக் கொள்கையின், தாராளமயக் கொள்கையின் முதல் விளைவாக பங்குச்சந்தை ஊழலில் இந்தியாவின் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் நிதி நிறுவனங்கள் மற்றும் அரசு அதிகாரிகள், மத்திய அமைச்சர்கள் அனைவரும் பங்கேற்று நடத்தப்பட்ட பெரும் ஊழல்தான் பங்குச்சந்தை ஊழல்.

அடுத்து சர்க்கரை ஊழல் அதில் பலகோடி ரூபாய் கொள்ளை போனது. அந்த ஊழலில் உணவு விநியோகத் துறையின் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தோணியை தொடர்புபடுத்தி மற்றொரு மத்திய அமைச்சர் கல்பனாத்ராய் குற்றம்சாட்ட, அந்த ஊழலுக்கு

தான் பொறுப்பில்லை என்று அறைகூவல் விடுத்து ராஜினாமா செய்துவிட்டார் அந்தோணி.

அடுத்ததாக 95ல் தொலைத் தொடர்பு துறையில் தொலைபேசி ஊழல். தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதில் சலுகைகள் காட்டி ரூ. 65 ஆயிரம் கோடி ஊழல் மத்திய அரசில் 96ம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவு என்னவென்று யோசித்துக் கொண்டிருக்கையில் "ஹவாலா" என்ற அந்நியச் செலாவணி மோசடி இந்திய நாட்டு அரசியலில் பெரும் பூகம்பத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இந்து பத்திரிகையிலே ஒரு கார்ட்டூன். கேலிச்சித்திரம். நரசிம்மராவிடத்திலே ஒருவர் சொல்கிறார். நான் ஒரு காங்கிரஸ் ஆரம்பித்திருக்கிறேன். என்ன காங்கிரஸ் என்றால் அது 'ஹெச்' காங்கிரஸ் என்கிறார். அதற்கு அவர் விளக்கமும் தருகிறார். "காங்கிரஸ் ஐ" அது இந்திரா காங்கிரஸ், "காங்கிரஸ் என்", அது நேஷனல் காங்கிரஸ் "காங்கிரஸ் ஹெச்" அது என்ன காங்கிரஸ் ஹெச்? "ஹவாலா காங்கிரஸ்" இது ஒரு புதுகாங்கிரஸ்? ஹவாலா காங்கிரஸ் என்று "இந்து" பத்திரிகையிலேயே கேலிச்சித்திரம் வெளியிடுகிற அளவிற்கு இன்றைக்கு நரசிம்மராவுடைய காங்கிரஸ். ஹவாலா காங்கிரஸ் என்று அழைக்கப்படுகிற அளவிற்கு மாற்றுருவம் பெற்றிருக்கிறது.

## ஈழத்தமிழர்களுக்காக ஒரு சொட்டு கண்ணீரும் வடிக்காத மத்திய அரசு

எனவேதான் இந்த இரண்டு ஆட்சிகளுடைய தவறான முறைகள் மத்தியிலும், மாநிலத்திலும் நடைபெறுகின்ற ஊழல்கள், அக்கிரமங்கள், அதிலும் குறிப்பாக மாநிலத்தில் நடைபெறுகின்ற அராஜக நடவடிக்கைகள், சட்ட விரோத சம்பவங்கள், சட்டம் ஒழுங்கு அமைதி இவைகளுக்கு இடையூறான நடவடிக்கைகள், மத்தியஅரசு ஈழத் தமிழர்களுக்காக ஒரு சொட்டு கண்ணீர் கூட வடிக்காமல் இருக்கிற நிலை. இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கின்ற பொழுது தி.மு.கழகத்தின் முன்னால் இருக்கின்ற பெரும்பிரச்சினைகள் வருகிற பொதுத்தேர்தலில் இந்த இரண்டு

ஆட்சிகளையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான் தி.மு.கழகத்தின் கொள்கையாக, குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதைத்தான் இந்த மாநாட்டில் எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திராகாங்கிரஸ் எமர்ஜென்சியை பிரகடனப்படுத்திய நேரத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண், இந்தியாவின் இரண்டாவதுசுதந்திரப் போராட்டத்தை நடத்திய போது தி.மு.கழகம் அவருக்கு ஆதரவு அளித்தது. அந்த இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயணனுடைய கைகளை பலப்படுத்தினோம் என்பதற்காக நம்மீது கோபம் கொண்ட இந்திராகாந்தி அம்மையார் 76ம் ஆண்டு ஜனவரித் திங்களில் தி.மு.கழக ஆட்சியைக் கலைத்தார். நம்மீது வழக்குகளைப் போட்டார். அவைகளெல்லாம் அரசியல் ஆதாயத்திற்காக, அரசியல் உள்நோக்கத்தோடு போடப்பட்ட வழக்குகள் என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் பேசினார். அசோக்மேத்தா பேசினார். சாந்திபூஷன் பேசினார். விஜயலெட்சுமிபண்டிட் பேசினார். தமிழ்நாட்டிற்குவந்து நம்முடைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஜெகஜீவன்ராமே கூட சொன்னார்.

எமர்ஜென்சியை எதிர்த்தது தி.மு.கழகம் என்பதற்காக ஆட்சியைக் கலைத்து தி.மு.கழகத்தின் தோழர்களையெல்லாம் மிசாக்கைதிகளாக சிறைச்சாலையிலே அடைத்து, கொடுமைபுரிந்த பிறகு 76ஆம் ஆண்டு இறுதியில் டெல்லிப்பட்டணத்தில் அனைத்துக் கட்சித்தலைவர்களைக் கூட்டி; யார் யார், சிறையிலே இல்லாமல் வெளியிலே இருந்தார்களோ, யார் யார் சிறையிலே இருந்து விடுதலை பெற்றிருந்தார்களோ அவர்களையெல்லாம் கூட்டி வைத்து டெல்லிப்பட்டணத்திலே நான் ஒரு கூட்டத்தை நடத்தினேன் நண்பர் செழியன் இல்லத்தில். நண்பர் ராஜாராம் என்னோடு இருந்தார்.

அந்தக் கூட்டத்திலேதான் ஜனதா கட்சி உதயமாவதற்கான தொடக்கம் நடைபெற்றது. பிறகு ஜனதா கட்சியோடு தி.மு.கழகம் தொகுதி உடன்பாடு கொண்டது. கூட்டணியிலே வாருங்கள் என்றார்கள். அதற்கு, நாங்கள் கூட்டாகசேர முடியாது. தொகுதி உடன்பாடுதான்

கொள்ளமுடியும் என்று சொன்னோம். காரணம் அது அண்ணா காலத்திலேயிருந்து பின்பற்றப்படுகிற கொள்கை என்பதால் தொகுதி உடன்பாடு மாத்திரமே கொண்டோம். தொகுதிஉடன்பாட்டிலேகூட எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டுமோ அவ்வளவு விட்டுக் கொடுத்தோம்.

உதாரணமாக மத்திய சென்னையில் நாடாளுமன்ற வேட்பாளராக தம்பி முரசொலிமாறன் நிறுத்தப்பட்டிருந்தார். அந்த இடத்திலே பா. ராமச்சந்திரன் ஜனதாகட்சி சார்பில் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக சஞ்சீவரெட்டியே என்னிடத்திலே பேசினார். ஒரு மாறனுக்காக, ஒரு தொகுதி உடன்பாட்டுக் கொள்கை வீணாகிவிடக்கூடாது, பாழ்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, விளம்பரங்கள் எல்லாம் செய்யப்பட்ட பிறகு மாறனை வாபஸ் வாங்கச்சொல்லி, மாறனைப்போல ஐந்தாறு தி.மு.கழக வேட்பாளர்களை வேறு சில இடங்களில் நின்றவர்களை எல்லாம் வாபஸ் வாங்கச் சொல்லி, ஜனதா கட்சிக்கு இடம் தந்து அந்தத் தேர்தலிலே தி.மு.கழகம் ஜனதாவினுடைய ஆட்சி வருவதற்கு உதவியது. ஆனால் தி.மு.கழகம் அதிக இடங்களைப் பெறமுடியவில்லை. ஒரே ஒரு ஆசைத்தம்பி தான் அன்றைக்கு வெற்றி பெற முடிந்தது.

## உடன்பாடு கொண்ட கட்சிகளுடன் கழகம் பெற்ற அனுபவங்கள்

அதற்குப் பிறகு ஜனதா ஆட்சியாளர்கள் நன்றி காட்டினார்களா? நான் நன்றியை எதிர்பார்க்கவில்லை. நட்புணர்வோடு இருந்தார்களா? இல்லை. இங்கே 77ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக ஆனார். ஒரு முதலமைச்சருடைய தொடர்பு தங்களுக்கு வரவேண்டும் என்று அரசியல்ரீதியாக சிந்தித்தார்களே அல்லாமல். ஆபத்தான நேரத்தில் கைகொடுத்தாரே, நாம் அண்டர்கிரவுண்டில் இருந்தபொழுது, ஒளிந்து வாழ்ந்தபொழுது உதவி செய்ததே அந்தக்கழகத்தினுடைய தலைவன் கருணாநிதி, அந்தக் கழகத்தினுடைய தோழர்களை மறக்கலாமா என்று யாரும் எண்ணவில்லை. அரசியல்

ஆதாயத்திற்காக யார் பயன்படுவார்களோ அவர்கள் போதும் என்று எம்.ஜி.ஆர். பக்கம் போனார்கள். இது தொகுதி உடன்பாட்டில் நமக்கு ஒரு அனுபவம்.

அடுத்து 80ல் இந்திராகாங்கிரசே முன்வந்தது. "நடந்ததையெல்லாம் மறந்திடுவோம். நெருக்கடிகால கொடுமைகளுக்கு எல்லாம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். கருணாநிதி நண்பனாக இருந்தாலும் விரோதியாக இருந்தாலும் இரண்டிலும் உறுதியாக இருக்கக் கூடியவன். நேருவின் உறுதி மொழியை நான் காப்பாற்றியே தீருவேன்" என்றெல்லாம் இந்திராகாந்தி அம்மையார் வாக்களித்து நாமும் மொரார்ஜியினுடைய ஆட்சியில், உள்ளவர்கள் தாங்களே ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்துக் கொண்ட சூழ்நிலையில், நிலையான ஆட்சி ஒன்று இந்தியாவிற்குத் தேவை என்ற காரணத்தால் இந்திராகாந்தியுடன் தொகுதி உடன்பாடு என்ற அளவில் ஆதரித்தோம். அந்த முடிவின்படி பாராளுமன்ற தேர்தலிலேத் மொத்தம் புதுவை உள்ளிட்ட 40 இடங்களில் இந்திராகாங்கிரசும், தி.மு.க.வும் 38 இடங்களிலே வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர். இரண்டே இடங்களில்தான் வெற்றிபெற முடிந்தது. அதற்குப்பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசுக்குப் பாதி – தி.மு.க.வுக்கு பாதி இடம் என்றார்கள். வேண்டாம் நாங்கள் தனியாகவே நிற்கிறோம் என்று சொன்னால் கேட்கவில்லை. நம்முடைய தோழர்களே கூட சிலபேர் கேட்கவில்லை. நான் ஜனநாயகத்திற்கு கட்டுப்பட்டவன். எனவே 'சரி' என்று ஒத்துக் கொண்டேன். ஒத்துக் கொண்டு பாதி – பாதி என்று இடங்களைப் பிரித்துக் கொள்கின்ற பொழுதே 'அபஸ்வரங்கள்' பேச ஆரம்பித்தன. தமிழ்நாடுகாங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எம்.பி. சுப்பிரமணியம் யார் முதலமைச்சர்? என்ற கேள்வியை எழுப்பினார். அப்பொழுதே தேர்தல் முடிவு தெரிந்துவிட்டது. அப்படி கூட்டு சர்க்கார் வைக்கப்போகிறோம் என்று தெரிந்ததன் காரணத்தால் யார், யாரை கவிழ்த்தால் யாருக்கு அதிக இடங்கள் வரும் என்ற எண்ணம் தோன்றியது. அதிலே காங்கிரஸ்காரர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஒருவரை ஒருவர் கவிழ்ப்பதில், கவிழ்த்துக்கொள்வதில் நான் நின்ற தொகுதியிலேகூட

காங்கிரஸ்காரர்கள் பலபேர் எனக்கு வாக்களிக்க வரவில்லை. பாராளுமன்றத்திலே காங்கிரஸ் வெற்றிக்குப் பாடுபட்ட நம்முடைய தோழர்கள் சென்று அழைத்தும்கூட முக்கியமானவர்கள் வாக்களிக்க வரவில்லை. இது 80ல் எங்கள் அனுபவம்.

பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்றோம். சட்டமன்றத் தேர்தலிலே தோற்றோம். அதற்குப்பிறகுகூட இந்திராகாந்தி அம்மையார் அவர்களைப் பொறுத்தவரையில் நம்மோடு கொண்டிருந்த நட்பை தளர்த்திக் கொள்ளவில்லை. ஆனால் இங்கே இருந்த காங்கிரஸ்காரர்கள் திருப்பத்தூர் தேர்தலிலே தவறாக நடந்து கொண்டார்கள். பெரியகுளம் தேர்தலிலே தவறாக நடந்து கொண்டார்கள். திருப்பத்தூர் தேர்தலிலே காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் இடைத்தேர்தலிலே இறந்துவிட்ட காரணத்தால், இடைத்தேர்தலிலே காங்கிரசுக்கு அந்த இடம் என்று அறிவித்து நாங்கள் எங்கள் செயற்குழுவிலே முடிவெடுத்தோம்.

இந்திராகாந்தி அம்மையார் அதை வரவேற்றார். எம்.ஜி.ஆரும் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று போனார். உடனே காங்கிரஸ் ஒரு அறிக்கை வெளியிடுகிறது. எங்களை ஆதரிப்பது சரி. ஆனால் எங்கள் மேடையிலே ஏறக் கூடாது என்றார்கள். எப்படி பரிசு பார்த்தீர்களா? எப்படி அனுபவம் பார்த்தீர்களா? எம்.ஜி.ஆர். மேடையிலே ஏறாவிட்டால் பரவாயில்லை. வேனிலேயிருந்து நான் காங்கிரசுக்கு பிரச்சாரம் செய்கிறேன் என்று சொன்னார். என்னை மூப்பனார் சந்தித்து "நீங்கள் வாருங்கள், நீங்களும் ஒரு வேனிலே வாருங்கள்" என்று சொன்னார். "மூப்பனார் அவர்களே நானும் தஞ்சாவூர்காரன், நீங்களும் தஞ்சாவூர்காரர் நான் சுயமரியாதை இயக்கத்தின் அடித்தளத்தை வைத்து வளர்ந்த இயக்கத்துக்குச் சொந்தக்காரன். "மதியாதார் தலைவாசல் மிதியாமை கோடி பெறும்" எனவே வர இயலாது. ஏதோ ஆதரித்தோம், அந்த வார்த்தையோடு இருக்கட்டும், யாரும் உங்களுக்காகவந்து பிரச்சாரம் செய்யமாட்டோம்" என்று சொன்னோம். பிறகு பெரியகுளம் இடைத்தேர்தலில் நின்றார்கள். ஜாமீனையே இந்திராகாங்கிரஸ் பறிகொடுத்தது.

தி.மு.க. வேட்பாளரை ஆதரிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இருந்தும்கூட நன்றியை மறந்து இந்திரா காங்கிரசார் பெரியகுளம் இடைத்தேர்தலில் நடந்துகொண்டார்கள். சொற்ப வாக்கு வித்தியாசத்தில் நாம் தோற்றுப் போக நேரிட்டது. இந்திரா காங்கிரசோடு நம்முடைய உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் உடைந்தது.

அதற்குப் பிறகுதான் 87,88 ஆம் ஆண்டு தேசியமுன்னணி உருவாயிற்று. அப்படி உருவான தேசியமுன்னணி முதன் முதலாக தொடக்க விழா நடத்தி, இந்தியாவே மட்டுமின்றி அகில உலகத்திலே உள்ள அரசியல் அரங்கம் அத்தனையும் பார்த்துக் களிக்கக்கூடிய வியக்கக்கூடிய அளவிற்கு தேசிய முன்னணி தொடக்க விழாவை சென்னையிலே நடத்திக் காட்டிய கட்சி தி.மு.கழகம். வி.பி.சிங் வந்தார். என்.டி. ராமாராவ் வந்தார். பல்வேறு தலைவர்கள் எல்லாம் கலந்துகொண்டார்கள். அந்த தேசிய முன்னணி தொடக்க விழாவையொட்டி தி.மு.கழகம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அதற்குப்பிறகு நாடாளுமன்றத்திலே தேசியமுன்னணி வெற்றி பெற்று முரசொலி மாறன் மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்று இவ்வளவும் நடைபெற்று நான் முதலிலே குறிப்பிட்டேனே சமூகநீதிப் பிரச்சினை அந்தப் பிரச்சினையிலும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக பாரதீய ஜனதா போர்க்கொடி உயர்த்தி பாபர் மசூதியை அப்போதே இடிக்க முயற்சித்தார்களே அந்தப் பிரச்சினையிலும் வி.பி. சிங் பதவி விலக நேரிட்டு ஜனதாதளக்கட்சி எதிர்க்கட்சியாக மாறிய இந்தச் சூழ்நிலையிலும் எங்கள் உறவு தொடர்ந்தது. வி.பி. சிங் பிரதமராக இல்லை என்பதற்காக நாங்கள் உறவை முறித்துக் கொள்ளவில்லை. உறவு தொடர்ந்தது. இன்றைக்கும் சொல்கிறேன். கடைசிவரையில் ஜனதாதளத்திற்கும் எங்களுக்கும் உறவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேசிய முன்னணியிலே தி.மு.க. இடம் பெற்றாலும், பெறாவிட்டாலும் வி.பி.சிங் என்கின்ற ஒரு நல்ல மனிதரை, நன்றியுள்ள மனிதரை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். இந்தத் தேர்தலில் என்ன செய்தார்கள். ஆந்திரத்திலே தேர்தல், கர்நாடகத்திலே தேர்தல். ஆந்திர தேர்தலுக்கு

தி.மு.க.வினுடைய உதவி, ஆந்திரத்தின் எல்லையிலே உள்ள தமிழர்கள் வாழும் தொகுதிகளில் எல்லாம் தி.மு.க. உதவி செய்ய வேண்டும் என்று ராமராவ் எனக்கு கடிதம் எழுதினார். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற அவருடைய மருமகன் சந்திரபாபு நாயுடு எனக்கு கடிதம் எழுதினார். ஆர்க்காடு வீராசாமியுடன் தொலைபேசியில் பேசினார். இரண்டுபேரும் நாயுடுகள் பேசினார்கள். உதவி நல்கினோம். ஆந்திர பகுதிகளில் நம்முடைய தோழர்கள் பணியாற்றினார்கள். வேடிக்கை என்னவென்றால் ஜெயலலிதா வேட்பாளரை நிறுத்தி ராமராவுக்கு எதிராக வேலைசெய்தார். அவருடையகட்சி வேட்பாளர்கள் ஆந்திராவில் நிறுத்தப்பட்டார்கள். ராமராவ் வெற்றிபெற்றார். வெற்றிபெற்ற பிறகு ஜெயலலிதாவை அழைத்து விழாநடத்தினார். வெற்றிபெற்ற பிறகு ஜெயலலிதாவையும் தேசிய முன்னணியில் சேர்த்துக் கொள்வோம் என்று அறிவித்தார். ஆனால் ஜெயலலிதாவிடமிருந்து ஒரு வார்த்தை அன்றும் வரவில்லை. இன்றும் வரவில்லை.

கர்நாடகத்திலே முதலமைச்சராக உள்ள தேவகௌடா அவர் தேர்தல் நேரத்திலே எனக்கு கடிதம் எழுதினார். உங்கள் கட்சியை கர்நாடகத்திலே எங்களுக்குப் பணியாற்ற சொல்லுங்கள். எந்தக் தொகுதி எங்களுக்குத் தருகிறீர்கள் என்று கேட்டபொழுது நீங்கள் எங்கும் போட்டியிட வேண்டாம். எங்களுக்கு ஆதரவு தாருங்கள். கார்ப்பரேசன் தேர்தலில் உங்களுக்கு நிறைய இடங்கள் தருகிறோம் என்று தேவகௌடா சொன்னார். அவரே நேரடியாக கடிதம் எழுதினார். கர்நாடகத்திலே நம்முடைய கழகத்தோழர்கள் பணியாற்றினார்கள். அங்கும் ஜெயலலிதா தன்னுடைய கட்சிக்காரர்களை போட்டியிடச் செய்தார். ஜனதாதளம் வென்றது. தேவகௌடா முதலமைச்சர் ஆனார். அவர் செய்த முதல்காரியம் சென்னைக்கு வந்தார். முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்தார். நன்றி கூறினார். நீங்களும் வாருங்கள் தேசிய முன்னணிக்கு என்று அழைத்தார்.

**யாரையும் வெளியேற்றமாட்டோம்; வெளியேறியதற்கு வருந்துவோம்!**

இவைகளையெல்லாம் பார்த்த பிறகு தேசியமுன்னணியில் தி.மு.கழகம் இனிமேல் இருக்காது என்று முடிவெடுப்பதைத் தவிர வேறு எந்த முடிவும் நம்மால் எடுக்கமுடியவில்லை. நாமாக யாரையும் அகற்றுவதில்லை. நாமாக இப்படிப்பட்ட விபரீதமான நிலைமைகளை உருவாக்குவதில்லை. உருவானால் வெளியேறுவதும் வெளியேறியதற்காக வருத்தப்படுவதும் நம்முடைய இயல்பு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பழனி, ராணிப்பேட்டையிலே, நம்முடைய வேட்பாளர்கள் சுப்புலட்சுமி ஜெகதீசனும், ஆர்க்காடு வீராசாமியும் நின்றபொழுது என்ன செய்தார்கள். மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கிரசுக்கும், தி.மு.க.வுக்கும் ரகசியமானஉறவு என்று ஒரு அவதூறை கிளப்பினார்கள். அப்படி இல்லையென்று உடனடியாக நம்முடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் மறுத்து அறிக்கை விடுத்தார். தேர்தல் முடிந்து வாக்குகளை எண்ணிப் பார்த்தபொழுது முதலிடத்திலே இருந்த காங்கிரஸ் பழனி இடைத் தேர்தலில் மூன்றாவது இடத்திற்கு வந்தது. ஒரு இலட்சம் வாக்கு வித்தியாசத்திலே தோற்றுப்போன தி.மு.கழகம் வெறும் 30 ஆயிரம் வித்தியாசத்திலேதான் வெற்றி வாய்ப்பை இழந்தது.

## 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம்!

இதை எடுத்துக்காட்டிய பிறகும் காங்கிரசோடு உங்களுக்கு உறவு என்றார்கள். அதையெல்லாம் பார்க்கும் நேரத்திலே நாமாக எந்த உறவையும் முறித்துக் கொள்வதில்லை. ஆனால் அவர்களாக முறித்துக் கொண்டால் அதற்கு நாம் கவலைப்படுவோம். கவலைப்பட்டுவிட்டு நாம் நம்முடைய பயணத்தைத் தொடர்வோம். அதைத்தான் நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். என்னிடத்திலேயிருந்து எதிர்பார்ப்பதென்ன? பேசியவர்கள் எல்லாம் சொன்னீர்கள். வழிகாட்டுங்கள், ஆணையிடுங்கள், உத்தரவிடுங்கள் என்று!

நான் சொல்கின்றேன் நேற்றைக்கு வந்தீர்களே 14 மணி நேரம் அந்த அணிவகுப்பு தொடரட்டும். போர்க்களத்திற்குச் செல்லட்டும். அந்தப் போர்க்களம்தான் நம் வெற்றிக்கான போர்க்களம். ஜனநாயகப் போர்க்களம். அந்த 14 மணி நேர அணிவகுப்பு தேர்தல் போர்க்களத்திற்குச் செல்லட்டும். இப்பொழுதே அந்தப்போரை தொடங்கி வைக்கிறேன். எனவே 234 தொகுதிகளிலும் நாமேதான் போட்டியிடுகிறோம். (பலத்த கைதட்டல்) 234 தொகுதிகளிலே நாம் போட்டியிடுகிறோம் என்றால் நம்முடைய கூட்டணிக்கட்சிகள் போட்டியிடுகிற இடத்தையும் நம்முடைய இடம்போல் பாவித்து பணியாற்றுகிறோம் என்று பொருள் (பலத்த கைதட்டல்)

தமிழ்நாட்டுக்கு தமிழ்மக்களுடைய ஒளிமயமான எதிர்காலத்திற்கு ஏமாற்றமில்லாத வகையில் 21ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்ல தி.மு.க.விற்கு உத்திரவு பெற்றுக்கொடுக்க உங்களை நான் அன்பால் அழைத்து பாசத்தில் தோய்த்து, நம்பிக்கையை குழைத்து உத்திரவிடுகிறேன். புறப்படு! புலிப்போத்தே புறப்படு, புறப்படு!

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

திமுகழக எட்டாவது மாநில மாநாட்டில் 'தமிழ்மொழி' குறித்து முரசொலி மாறன் ஒரு சிறப்புத் தீர்மானம் கொண்டு வந்து முன்மொழிந்து பேசியதாவது :

இந்தத் திருச்சியில்தான் 1956–ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் நாம் தேர்தலில் கலந்து கொள்ளலாமா வேண்டாமா என்கிற முக்கியமான தீர்மானம் பற்றி முடிவு எடுத்தார்கள். இங்கேதான் 1971–ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் அப்பொழுது முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்கிற அந்த சுலோகத்திற்கு முதன்மை கொடுத்து ஐம்பெரும் முழக்கங்களை உருவாக்கினார்.

இன்றைய தினம் இதே திருச்சியில்தான் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு தீர்மானத்தை தி.மு.கழகத்தின் பொதுக்குழு முன்மொழிந்து, அந்தத் தீர்மானத்தை உங்களுடைய அன்பான உத்தரவுக்காக உங்கள் முன் படிக்கிறேன். எனவே இந்தத் தீர்மானத்திற்கு நீங்கள் அனைவரும் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தச் சிறப்பு தீர்மானத்தை , அந்த எழுச்சி மிகுந்த தீர்மானத்தை – அந்தத் திருப்புமுனை தீர்மானத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

## தீர்மானம் – மத்தியில் தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்க வலியுறுத்தல் (சிறப்புத் தீர்மானம்)

"இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம்வரை மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கும்; பிறமொழி மக்கள்மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்னும் நேருவின் வாக்குறுதி தொடர்ந்து மீறப்படுகிறது. மத்தியஅரசின் மக்கள் தொடர்பு (MASS MEDIA)த் துறைகளான தொலைக்காட்சி – வானொலி ஆகியவற்றில் இந்தி ஆதிக்கம் வளர்க்கப்படுகிறது. பிறமொழி மாநிலங்களிலுள்ள மையஅரசு அலுவலகங்களில் இந்தித் திணிப்பு தொடர்கிறது.

உதாரணமாக மையஅரசின் வருமானவரி போன்ற பல துறைகளின் படிவங்கள் இந்தியில் அச்சிடப்படுவதால், தமிழ் மக்கள் தாம் பிறந்த சொந்த நாட்டிலேயே அந்நியப்படுத்தப்படுகிறார்கள். பலவகையிலும் உரிமை பாதிக்கப் பட்டவர்களாகிறார்கள். இந்நிலையில் அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளும் (all the official languages of the States) மையஅரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுவது ஒன்றுதான் இதற்குத் தீர்வு என்று தி.மு.கழகம் நீண்டகாலமாகக் கூறி வருகிறது. அனைத்து மாநில மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குவது உடனடியாக இயலாது என்று மையஅரசு கருதுமாயின் முதல் கட்டமாக இந்தியுடன் தொடர்பற்ற திராவிடக் குடும்ப மொழிகளில் ஒன்றான இலக்கியப் பண்பாட்டுவளம் நிறைந்த தமிழ் மொழியை உடனடியாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்க வேண்டும் என்றும்; அதற்கேற்ப அரசமைப்பு சட்டம் ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும்; இம்மாநாடு வலியுறுத்துகிறது.

ஒரே வரியில் சொல்ல வேண்டுமேயானால் "மத்திய அரசே! உடனடியாக தமிழையும் இந்தியோடு சேர்த்து இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கு" என்று கேட்டுக் கொள்கிற தீர்மானம்தான் இந்தத் தீர்மானம்.

இதன் மூலமாக நம்முடைய கோரிக்கைக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், ஒரு புதிய வேகத்தையும் நாம் கொடுக்கிறோம். We are giving a new dimension and thrust to our policy இந்தியாவிலே இரண்டு மொழிக் குடும்பங்கள் இருக்கின்றன. இந்திய மொழிகளை இரண்டு மொழிக் குடும்பங்களாக பிரிக்கலாம். ஒன்று திராவிடமொழிக் குடும்பம்; அதுதான் தென்னாட்டில் வழங்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய அனைத்தும் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. அந்த மொழிக் குடும்பத்திற்கு பிரதிநிதித்துவம் கிடையாது. நீங்கள் ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறீர்களே அந்த இந்தி 'இந்தோ ஆரிய' (Indo - Aryan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. எனவே திராவிட

மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழையும் ஆட்சி மொழியாக ஆக்குங்கள் என்று நாம் கேட்கிறோம்.

இதில் ஒரு சிறு விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவரையில் நாம் என்னசொல்லி வந்தோம் என்றால் எட்டாவது அட்டவணையில் இருக்கிற மொழிகளை ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கட்டும் என்று சொல்லி வந்தோம். இப்பொழுது அதை மறுபரிசீலனை செய்திருக்கிறோம். ஏனெனில் எட்டாவது அட்டவணையில் இருக்கிற அந்த மொழிகள் – அந்த எட்டாவது அட்டவணையே எங்கள் கருத்துப்படி முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. ஏனென்றால் அந்த எட்டாவது அட்டவணையை எதற்காக உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், எந்தெந்த மொழிகளிலிருந்து கடன் வாங்கி இந்தியை வளப்படுத்தலாம் என்பதற்கு ஒரு பட்டியல் போட்டிருக்கிறார்கள். அதுதான் எட்டாவது அட்டவணை. அது ஒன்றைத் தவிர அதற்கு வேறு தனிச்சிறப்பு கிடையாது. மேலும் அது உண்மையை பிரதிபலிப்பதாக இல்லை. It is not realistic.

அறிஞர் அண்ணா காலத்தில் எட்டாவது அட்டவணையில் பதினான்கு மொழிகள் இருந்தன. இன்றைய தினம் அது பதினெட்டு மொழிகளாக ஆகியிருக்கின்றன. அந்த எட்டாவது அட்டவணையிலே ஒரு மொழி இருக்கிறது. அந்த மொழிக்குப் பெயர் சமஸ்கிருதம். இந்திய மக்கள் தொகை கணக்குப்படி சமஸ்கிருதத்தை தாய்மொழியாகக் கொண்டவர்கள் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பேர் இருக்கிறார்கள். அது உண்மையா என்றால் இல்லை. சமஸ்கிருதம் செத்துப்போய் எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன.

இப்படித் தவறான தகவல்கள் அடிப்படையில் அமைந்திருக்கிற காரணத்தாலும் மேலும் அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போவதாலும்தான் மாநிலங்களில் ஆட்சி மொழிகளாக இருப்பவைகளை இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்குங்கள் என்று கேட்கிறோம். இப்பொழுது இதற்கு ஏன் அவசரம் என்று நீங்கள் கேட்கலாம்.

எனக்கு முன்பு பேசிய அருமைச் சகோதரர் ரகுமான்கானும் மற்றவர்களும் மிக அழகாகச் சொன்னார்கள். நாங்கள் 1938ஆம் ஆண்டிலிருந்து ஐம்பத்தெட்டு ஆண்டு காலமாக இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி வருகிறோம். இனிமேல் இந்தியை நேரடியாக திணிக்க முடியாது என்பதை 1965ல் ஏற்பட்ட இந்திஎதிர்ப்பு புரட்சிக்குப்பிறகு இந்தி ஏகாதிபத்தியவாதிகள் அறிந்து கொண்டார்கள். எனவேதான் அவர்கள் இப்போது கொல்லைப்புறமாக இந்தியைக் கொண்டு வருகிறார்கள்.

ஒரு காலத்தில் கட்டாயமாக இந்தியைத் திணித்தார்கள். இப்பொழுது அது முடியாதென்ற காரணத்தால்தான் கள்ளத்தனமாகத் திணிக்கிறார்கள். Now Hindi is introduced stealthily and by the back door. ரயிலில் முன்பதிவுப்படிவம் இந்தியில் இருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இந்தி; ரிசர்வ் வங்கியில் இந்தி. இப்படி எங்கு பார்த்தாலும் இந்தி; ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ராக்கெட் விடுகிறார்களே அந்த அலுவலகத்தில் இந்தி. அங்கு இருக்கிற விஞ்ஞானத்திற்கும் இந்திக்கும் என்ன தொடர்பு? இருந்தாலும் இந்தியைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். ரயில் டிக்கெட்டுகளில் இருந்த தமிழை எடுக்கிறார்கள். நாம் தூங்கும்பொழுது நம் தொடையிலே கயிறு திரிக்கிறார்கள்.

எனவேதான் நாம் முடிவெடுத்துவிட்டோம். இனி பொறுத்திருக்க முடியாது. நேரடியாக வந்தாலும், மறைமுகமாக வந்தாலும் இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்பதற்காகத்தான் இந்தி என்கிற ஒரு வட்டார மொழியை நாங்கள் ஏற்க முடியாது. தமிழ் ஒரு வட்டார மொழி என்றால் எங்களைப் பொறுத்தவரை இந்தியும் ஒரு வட்டார மொழிதான்! இந்தி வட்டார மொழியாக இருக்கும்பொழுது – அந்த வட்டார மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்பொழுது ஏன் எங்களுடைய தமிழ்மொழியை ஆட்சி மொழியாக ஆக்கக் கூடாது? இது வெறும் மொழிப் பிரச்சினை மாத்திரமல்ல.

இன்னும் சொல்லப் போனால் ஒருமுறை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், இதே திருச்சியில் நடைபெற்ற ஒருமாநாட்டில்

பேசும்பொழுது குறிப்பிட்டதைப்போல இந்தியைப்போல ஒரு சுலபமான மொழி கிடையாது. ஒரு மாதத்திலே இந்தியைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் இது மொழிப் பிரச்சினை அல்ல. அரசியல் ஆதிக்கப் பிரச்சினை. அந்த மொழிக்கு மட்டும் முதன்மை கிடைக்கவில்லை. அதனால் அந்த மொழியைப் பேசுகிறவர்களுக்கும் முதன்மை கிடைக்கிறது – இந்தி பேசாத மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படுகிறார்கள். எனவே இந்த அரசியல் ஆதிக்கம் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்குக் கிடைக்கிறது. It is a question of political domination and power. Non-Hindi speaking people are reduced to second class citizens. எனவேதான் நாங்கள் இந்த மொழிப் பிரச்சினையிலே நீதி வேண்டும்; எல்லா மொழிகளுக்கும் சமவாய்ப்பு வேண்டும்; சம பாதுகாப்பு வேண்டும்; எங்கள் மொழிக்கும் அத்தகைய உரிமை வேண்டும்; மதிப்பு வேண்டும்; மரியாதை வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். We demand national justice, equality of opportunity, equal protection of every language, group and interest.

இந்திக்காக கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்படுகிறது. இந்தியை வளர்ப்பதற்காகவும், பரப்புவதற்காகவும், கோடிக்கணக்கில் செலவழிக்கிறார்கள். அது யார் வீட்டுப் பணம்? நம்முடைய வரிப்பணத்திலிருந்து, நம்மை நாமே அடிமைப்படுத்திக் கொள்வதற்காக நாம் வரியைக் கொடுக்கிறோம். அந்த அந்நிய மொழிக்கு மாத்திரமல்ல; அந்த மொழியைப் பேசுவோருக்கும் நாம் அடிமையாகிக் கொண்டிருக்கிறோம். We are paying taxes to keep ourself, our language and culture permanently under the subjection of one foreign language and naturally also of the people who speak it. இந்தி என்பது எங்களுக்கு ஒரு அந்நிய மொழி. எதற்காக எங்களுடைய வரிப்பணத்தை அதற்குச் செலவழிக்க வேண்டும்? இந்தக் கேள்வியை உரத்தக் குரலில் கேட்கிறோம். இந்தி மொழிக்கும், இந்தி மொழியை பேசுகிறவர்களுக்கும் நம்முடைய வரிப்பணம் செலவாகிறது. அதன் மூலமாக நாம் அடிமைப்படுத்தப்படுகிறோம்.

சரி! தமிழை இந்தி மொழியோடு சேர்த்து ஆட்சி மொழியாக ஆக்க முடியுமா என்றால், முடியும்.

U.P.S.C. – என்று சொல்லப்படுகிற மத்திய அரசின் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் தேர்வுகள் இப்போது 15 மொழிகளில் நடத்தப்படவில்லையா?

அதுமட்டுமா? சின்னஞ்சிறிய சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. சின்னஞ்சிறிய பெல்ஜியம் நாட்டிலே இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், கனடாவில் பத்து மாநிலங்கள். அதில் பிரஞ்சுமொழி பேசப்படுவது கியூபெக் என்ற ஒரு மாநிலத்தில்தான். ஆனால் அங்கே ஆட்சிமொழிகள் எது என்று கேட்டால் ஆங்கிலமும், பிரஞ்சுமொழியும் என்று பெருமையோடு சொல்கிறார்கள்.

அப்படி ஆட்சிமொழிகளாக, கனடாவில் இரண்டு மொழிகள் வழங்கும்பொழுது சுவிட்சர்லாந்து நாட்டில் மூன்று மொழிகள் வழங்கும்பொழுது, பெல்ஜியத்திலே இரண்டு மொழிகள் வழங்கும்பொழுது இந்தியாவிலே ஏன் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்க முடியாது? அது மட்டுமல்ல; இந்தியைவிட எங்கள் தமிழ்மொழி இலக்கிய வளம் படைத்த மொழி, இலக்கண அமைப்பு கொண்ட மொழி.

இன்னும் சொல்லப் போனால் இப்பொழுது இந்திமொழி என்று அழைக்கிறோமே; அதன் பெயர் 'கரிபோலி இந்தி' என்று பெயர். 1850 ஆம் ஆண்டிற்கு முன்பு அதாவது நூற்றி நாற்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு – அந்த கரிபோலி இந்திமொழி முழுமையாக இருந்ததே கிடையாது. இவ்வாறு டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜி கூறியிருக்கிறார். இந்தியாவின் மிகத் தொன்மையான இலக்கிய மொழி எது என்று கேட்டால் அது நம்முடைய தமிழ் மொழிதான்! அது ஐயாயிரம் ஆண்டுகளுக்குமேல் பேசப்படுகிற மொழி! அதுமட்டுமல்ல; நம்முடைய இலக்கணவளம் கொண்ட நூல் தொல்காப்பியம். அது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இப்பொழுது பண்டிதர்கள், மொழிநூல் வல்லுநர்கள்,

எழுப்புகிற கேள்வியே தொல்காப்பியத்தினுடைய வயது இரண்டாயிரமா, மூவாயிரமா அல்லது நாலாயிரமா என்பதுதான்.

அது மட்டுமல்ல; தமிழ் ஒரு உலக மொழி. Tamil is an international language. இலங்கையில் அது ஆட்சி மொழி. அங்கே இருக்கிற தமிழர்களுக்கு உரிமை இல்லை – ஆனாலும் அங்கே தமிழ் ஒரு ஆட்சி மொழி. அந்த உரிமைகூட இங்கே இருக்கிற தமிழர்களுக்குக் கிடையாது. திருச்சி விமான நிலையத்திற்கு இலங்கையிலிருந்து விமானங்கள் வருகின்றன. அதில் Sri Lankan Air Service என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. அதற்கு அடுத்து சிங்கள மொழியிலும் எழுதப்பட்டிருக்கிறது. அதே போல் 'இலங்கை விமான சேவை' என்று தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து வெளியாகிற தபால் தலைகளில் தமிழ் இருக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் ஒரு ஆட்சி மொழி. மலேசியாவில் தமிழ் ஆட்சி மொழி. மொரீசியசில் தமிழ் வழங்கப்படுகிறது. தென்னாப்பிரிக்காவில் தமிழ் வழங்கப்படுகிறது. சிங்கப்பூர் நாடாளுமன்றத்திற்கு நீங்கள் செல்வீர்களேயானால் அதன் வாயிலில், 'Singapore Parliament' என்று எழுதப்பட்டிருக்கும். அது மட்டுமல்ல; தமிழிலும் "சிங்கப்பூர் நாடாளுமன்றக் கூடம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் டெல்லிக்குச் சென்றால், அங்கு 'லோக்சபா' என்றும் 'ராஜ்யசபா' என்றும் இந்தி வார்த்தைகள்தான் இருக்கின்றன.

எனவேதான் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று விரும்புகிறோம் என்றால் அது எங்கள் தமிழ்த் தேசிய இன எழுச்சியின் அடையாளம். எங்கள் கலாச்சார அடையாளத்தை, தனித்தன்மையை அழியாமல் காக்க வேண்டுமென்கிற நீண்ட நாள் உரிமை வேட்கையின் அடையாளம்தான் இந்தக் கோரிக்கை. It is a natural expression of our Tamil nationalism and our long-standing belief in the need to protect our distinct culture, heritage, identity and uniqueness. எங்களுடைய கலாச்சாரத்தையும்; தனித்தன்மையையும் இந்தியா என்கிற கடலில் கரைத்த பெருங்காயமாக ஆக்கிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. இது ஏதோ நாங்கள் புதிதாகக் கண்டுபிடித்த தத்துவம் அல்ல. அறிஞர்

அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தபொழுது **1965**–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் அவர் மிக அழகாக அவருக்கே உரிய ஆங்கில நடையிலே குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு ....

"I can never forget that I have got a hoary language called Tamil. I will never be satisfied till that language in which my forefathers spoke, in which my poets have given sermons and scriptures, in which we have got classics and literature of inexhaustible knowledge. I will be never be content till that day when Tamil takes its due place as one of the official languages in the Union."

அதாவது: "மிகத் தொன்மையான மொழியான தமிழை தாய் மொழியாக நான் பெற்றிருக்கிறேன் என்பதை நான் மறந்துவிட முடியாது. எனது முன்னோர்கள் பேசிய அந்த மொழி – எனது கவிஞர்கள் அரும்பெரும் அறிவுரைகளையும், தத்துவங்களையும் யாத்துக் கொடுத்த அந்த மொழி – அள்ள, அள்ளக் குறையாத அறிவுக்களஞ்சியங்களும், காவியங்களும், இலக்கியங்களும் நிறைந்த அந்த மொழி – அதுதான் எனது தமிழ்மொழி – அம்மொழி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறும்வரை நான் ஒருபோதும் திருப்தியடைய மாட்டேன்" என்று அண்ணா பேசியிருக்கிறார்.

அவருக்கேயுரிய ஆங்கில நடையில் தொனி இசையில் எப்படி அண்ணா பேசியிருப்பார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.

அது மட்டுமல்ல அடுத்து அண்ணா பேசுகிறார் :

"But we have got a language of our our own and therefore we plead that our language should find a place in the official languages list of this Union. Till that time, English should continue so that there may not be injustice, intentional or unintentional."

"அநீதி இழைக்கப்படாமல் இருப்பதற்காக என்னுடைய

மொழியாகிய தமிழ்மொழியை ஆட்சி மொழி ஆக்கு. அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும்" என்று அண்ணா சொல்லியிருக்கிறார். இது மிகவும் கஷ்டமான காரியமாயிற்றே என்று யாராவது மத்திய அரசு சார்பாக சொல்வார்களேயானால் அவர்களுக்கு நான் சொல்கிறேன்: இந்திய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் நீங்கள் தரக்கூடிய விலை இதுதான். This is the price we have to pay for the unity of our country இதை நான் மாநிலங்களவையிலேயே சொல்லியிருக்கிறேன். எங்கள் நோக்கத்தை சந்தேகிக்காதீர்கள். எதற்காக தமிழ்மொழி மட்டும் என்றால்; மற்ற மொழிக்காரர்கள் முன்வரவில்லை. ஏன் முன்வரவில்லை என்றால்; நமக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. நாங்கள் இதுவரை காத்திருந்தோம். மணி அடித்துவிட்டது. எங்கள் வண்டி புறப்பட்டுவிட்டது. எங்கள் மொழியை ஆட்சி மொழி ஆக்கு என்று நாங்கள் சொல்கிறோம்.

தமிழ் ஏன் ஆட்சிமொழி ஆக வேண்டுமென்றால் அவ்வாறு தமிழ் மக்கள் கேட்கிறார்கள். Why Tamil alone? The answer to this question is this : Because we demand it. அது மட்டுமல்ல; எங்களைத் தொடர்ந்து வருமாறு இதர மொழிக்காரர்களையும் நாங்கள் தூண்டி விடுகிறோம். "தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க, தமிழர்கள் திரண்டு விட்டார்கள். பிற மொழிக்காரர்களுக்கும் சுயமரியாதை இருக்குமேயானால், மொழி உணர்வு இருக்குமேயானால், நீங்களும் உங்களுடைய தாய்மொழி, உங்களுடைய மாநிலத்தின் மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கோரிக்கை எழுப்புங்கள். தமிழ்நாட்டைப் பின்பற்றுங்கள்" என்று இங்கிருந்து குரல் கொடுக்கிறோம். வேண்டும் என்பதும் வேண்டாம் என்பதும் அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது.

இதனால் ஏதோ பிரளயம் ஏற்பட்டு விடுமென்று யாரும் பயந்துவிட வேண்டாம். நான் 1979–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாநிலங்களவையில் இதே கருத்துப்பட ஒரு தனிநபர் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியிருக்கிறேன். இப்பொழுது மார்க்கிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிறாரே; மதிப்பிற்குரிய அரிகிஷன்சிங் சுர்ஜித்

அவர்கள் அப்பொழுது மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தார். அவர் என்னுடைய தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். என்ன திருத்தம் என்றால் "நாடாளுமன்றத்திலும் சரி, மத்தியஅரசு அலுவலகங்களிலும் சரி; எல்லா தேசிய மொழிகளுக்கும் சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் எல்லா தேசிய மொழிகளிலும் பேசுவதற்கு அனுமதி வேண்டும். உடனடியாக மொழி பெயர்ப்பு வேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேறுகிற அனைத்து சட்டங்களையும் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும்" என்பது அவரது திருத்தம்.

அது மட்டுமல்ல; இதுதான் முக்கியமானது: "மத்திய அரசின் பணிகளுக்காக இந்தியைக் கட்டாயமாக உபயோகப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்" என்று மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக அப்போதே அரிகிஷன்சிங் சுர்ஜித் அவர்கள் திருத்தம் கொண்டு வந்தார்கள்.

இன்னும் ஒருபடி மேலே சென்று நான் ஏற்கனவே சொன்னேனே "மற்றவர்களையும் தூண்டிவிட விரும்புகிறோம். மற்றவர்களின் மொழி உணர்ச்சியையும் நாங்கள் கிள்ளிவிட விரும்புகிறோம். அவர்களும் எங்களைப்போல தங்களுடைய தாய்மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக வேண்டுமென்பதற்காக அவர்களும் குரல் கொடுக்க வேண்டும்" என்று சொன்னேனே அப்பொழுது பேராசிரியர் என்.ஜி. ரங்கா அவர்கள் உறுப்பினராக இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர். அவர் என்னுடைய தனிநபர் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொடுத்தார். அது என்னவென்றால் "தமிழ் மட்டுமல்ல; தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், ஒரிய மொழியும், வங்காளி மொழியும், தமிழோடு சேர்ந்து ஆட்சி மொழி ஆக வேண்டும்" என்று ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

ஆகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இந்தியாவுக்கு ஆபத்து வராது. இன்னும் சொல்லப்போனால் இந்தியாவின் ஒருமைப்பாடு, ஒற்றுமை இன்னும் வலுப்படும். அரசியல் சட்டத்தினுடைய **343–வது** பிரிவின் **(1)**–ஆவது விதி என்ன சொல்கிறது

"The official language of the Union shall be Hindi in Devanagari script" தேவநாகரி எழுத்தில் எழுதப்படுகிற இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று சொல்கிறது. நாங்கள் என்ன சொல்கிறோம்? அதை மாற்றி இந்தி மட்டுமல்ல; தமிழ் எழுத்துக்களில் எழுதுப்படுகிற தமிழும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக வேண்டும், இதை உடனடியாக மத்திய அரசு ஏற்க வேண்டும் – என்று அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துமாறு வற்புறுத்துவதுதான் இந்தத் தீர்மானம். இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள்.

எனவே தோழர்களே! இந்தியாவின் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றான திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்மொழி; உலகெங்கும் பேசப்படுகிற மொழி; சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் ஆட்சிமொழியாக இருக்கிற மொழி; இலங்கையில் ஆட்சி மொழியாக இருக்கிற மொழி; தென்னாப்பிரிக்காவில் பேசப்படுகிற மொழி; மொரீஷியஸ் தீவுகளில் வழங்கப்படுகிற மொழி – அந்த மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்கின்ற இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அப்பொழுதுதான் தமிழன் தலைநிமிர்ந்து நிற்க முடியும். அப்பொழுதுதான் தமிழன் சுயமரியாதை உணர்வு கொண்டு நிற்க முடியும். இங்கே திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் இந்தியில் எழுதினால் அங்கே அலகாபாத் ஸ்டேஷனில் தமிழில் எழுது. எங்களுக்கு அப்படிக் கேட்க உரிமை இருக்கிறது. இங்கே இந்தியை மட்டும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். இங்கு வருமான வரித்துறை படிவத்திலே இந்தியிலே எழுதினால் அதோடு தமிழிலும் எழுது. இந்தியா முழுவதிலும் அப்படி எழுது. மத்திய அரசு அலுவலகங்களில் இந்தி செயல்படும் பொழுது அதில் தமிழும் செயல்பட வேண்டும் என்கிற இந்தத் தீர்மானத்தை வங்கக் கடலருகே துயிலுகின்ற அறிஞர் அண்ணாவை வணங்கி, தாளமுத்து நடராசன் பெயரால், இந்தி எதிர்ப்பு தியாகிகளின் பெயரால், இந்தியாவில் வாழ்கிற இந்தியத் தமிழர்கள் பெயரால், உலகெங்கும் வாழ்கிற தமிழர்கள் பெயரால், இந்திய ஒற்றுமையின் பெயரால், ஒருமைப்பாட்டின் பெயரால்,

பிறமொழி பேசுகிற அருமைச் சகோதர, சகோதரிகளே! உங்களுக்காக எங்களால் காத்திருக்க முடியாது; வேண்டுமானால் நீங்களும் எங்களை பின் தொடருங்கள்; பின் தொடர்ந்து வாருங்கள் என்று கேட்டுக் கொண்டு, அதற்கு முன்பு எங்கள் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொண்டு – வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன். இதை பெரும் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் வழிமொழிய இருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானம் விரைவில் உருப்பெறாவிட்டால் தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்படாவிட்டால் – கிளர்ச்சி தொடரும். இந்தத் தலைமுறைக்கும் வருங்காலத் தலைமுறைக்கும் இந்தத் தீர்மானத்தை நான் அர்ப்பணிக்கிறேன். இனியும் தமிழன் தூங்கிக் கொண்டிருக்கமாட்டான். எங்கள் மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும்.

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இந்தியா ஒரு யூகோஸ்லேவியாவாக ஆக்க கூடாதென்று நாங்கள் விரும்புகின்றோம். எனவே இந்திய ஒற்றுமையின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன். தமிழை ஆட்சி மொழி ஆக்கு! இந்தியாவைக் காப்பாற்று! இந்தியா காப்பாற்றப்பட வேண்டுமேயானால் இந்தியாவின் அங்கமாக என்றும் தமிழ்நாடு இருக்க விரும்புகிறது. நாங்கள் இந்தியத் தமிழர்களாக வாழ விரும்புகிறோம். எங்கள் சொந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ விரும்பவில்லை. அது சாத்தியமாவதற்கு தமிழை ஆட்சிமொழியாக ஆக்குங்கள், ஆக்குங்கள் – என்று இந்தத் தீர்மானத்தை முன் மொழிவதின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முரசொலி மாறன் பேசினார்.

முரசொலி மாறன் அவர்கள் முன்மொழிந்த சிறப்புத் தீர்மானத்தை வழிமொழிந்து பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : –

நம்முடைய முரசொலி மாறன் அவர்கள் இங்கே கொண்டு வந்து மிக விளக்கமாக தகுந்த ஆதாரங்களோடு எடுத்து மொழிந்திருக்கிற இந்த தீர்மானத்தை நான் வழிமொழிவதற்காக நிற்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்பைத் தொடங்கி வைத்தார்கள். அதை வழிமொழிந்து கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தி ஆதிக்க எதிர்ப்பிற்காக பலமுறை போராட்டம் நடத்தினார்கள். அதிலே ஈடுபட்டவர்களிலே நானும் ஒருவன். தி.மு.கழகச் சார்பில் கலைஞர் தலைவராக இருந்து மொழி காக்கும் போராட்டங்கள் நடைபெற்றன. அதிலே கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன்.

தி.மு.கழகத்தினுடைய வரலாறு எழுதப்படுகிற எந்த ஒரு நிலையிலேயும், தி.மு.கழகம் என்று சொன்னால் மொழி உரிமைக்காக போராடுகிற இயக்கம், தொடர்ந்து போராடுகிற இயக்கம் என்றுதான் அந்த வரலாற்றைக் காண்பவர்கள் உணர்வார்கள் – அறிவார்கள். நம்முடைய இயக்கத்திலே இழையோடிக் கொண்டிருக்கிற உணர்வு – அந்த உணர்வு. தமிழோடு ஆங்கிலமும் இருக்கட்டும் என்ற இருமொழிக் கொள்கையை அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நடைமுறைப் படுத்தினார் என்று சொன்னால், இந்தி ஆதிக்கத்தைத் தடுத்த நிறுத்த, இந்தியைத் திணிக்க முடியாமல் தடைப்படுத்த, தமிழர்கள் இந்திக்கு இரையாகாமல் இருக்க; இரண்டாந்தர குடிமக்கள்தான் என்பது நிலை நிறுத்தப்படாமல் இருப்பதற்கு ஒரு தடையாக, கேடயமாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைமை காரணமாக தமிழோடு ஆங்கிலத்தை இணைத்து இருமொழித்திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள்.

நம்முடைய உணர்வில் இந்தி ஆதிக்கம் ஏற்படாத வகையில் – தமிழுக்கும் அந்த தமிழ் மூலமாக தமிழருக்கும் உரிமை கிடைக்குமானால் – மத்திய ஆட்சி உரிமை கிடைக்குமானால் – அறிவியல் தேவைகளுக்காக அல்லாமல் வேறு நாட்டு நடப்பு தேவைகளுக்கு, அரசியல் தேவைகளுக்காக ஆங்கிலத்தைப் பயன் கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இருக்காது.

இன்றைக்கு ஆங்கிலத்தை துணைக் கொள்வது இந்தி ஆதிக்கத்தைத் தடுப்பதற்காகத்தான். எனவேதான் இந்த உணர்வு அடிப்படையில் ஆங்கிலம் வேண்டாம். இந்தி வேண்டும் என்று சொல்கிற வடபுலத்தைச் சேர்ந்தவர்கள், இந்தி உணர்வு உள்ளவர்கள். தமிழுக்கு இடம் தருவது மூலமாக ஆங்கிலத்தை தவிர்க்கிற வாய்ப்பை இன்றைக்கு நாம் அவர்களுக்கு வழங்கியுள்ளோம். தமிழருடைய உரிமை என்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம்.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்று புரட்சிக் கவிஞர் பாடிய அந்த உணர்வு நமக்குச் சொந்தம். அந்த உணர்வோடுதான் இங்குள்ள தமிழர்கள் உணர்ச்சியோடு போராடி தமிழுக்கு மத்திய ஆட்சிப் பீடத்திலே ஆட்சி மொழி என்ற தகுதியைப் பெற்று விடுகிற நிலைமையை நாம் உருவாக்கினால்தான் என்றென்றைக்கும் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்ற அந்த அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானம் இந்த மாநாட்டிலே, மிக முக்கிய மாநாட்டில் மிக முக்கியமான தீர்மானமாக, வருங்கால வரலாற்றை உருவாக்குகிற தீர்மானமாக எனது அன்பிற்குரிய முரசொலி மாறன் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நாம் அடிக்கடிச் சொல்லி வருவதைப் போல "வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற உணர்வோடு இந்தத் தீர்மானத்தை தி.மு.கழக பொதுச் செயலாளர் என்ற முறையில் இந்தக் கழகம் முன் மொழிந்து வழிமொழிந்த தீர்மானங்கள் நாட்டில்

நிறைவேற்றப்படும் காலத்திலேதான் பிரச்சினைகள் தீரும் என்ற அந்த உணர்வோடு இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன். வாழ்க தமிழ்! என்று வாழ்த்துகிறேன்.

9 SEP 2010
சென்னை-85

இவ்வாறு பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து பேசினார்.

## பேராசிரியர் அவர்கள் தீர்மானத்தை வழிமொழிந்து பேசியவுடன் தலைவர் கலைஞர் அவர்கள் தீர்மானம் பற்றி குறிப்பிட்டதாவது

297759

தமிழ்மொழியை மத்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்மானத்தை தி.மு.கழகத்தின் சார்பாக தம்பி முரசொலி மாறன் முன்மொழிந்திருக்கிறார். இதனை கழகத்தினுடைய பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்திருக்கிறார்கள்.

இதை ஆதரிக்கின்ற வகையில் மாத்திரமல்ல; உணர்ச்சிப்பூர்வமாக மத்திய அரசின் காதுகளுக்கு எட்டுகின்ற அளவிற்குச் செய்ய மாநாட்டில் குழுமி இருக்கின்ற நீங்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலில் எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும். மேடையிலே உள்ளவர்களும், பந்தலிலே உள்ளவர்களும் எழுந்து நிற்க வேண்டும் (உடனடியாக மாநாட்டுப் பந்தலில் குழுமியிருந்த பொதுமக்களும், மேடையிலிருந்தவர்களும் எழுந்து நின்றனர்)

நான் "தமிழ்மொழியை" என்று சொல்லுவேன் நீங்கள் "மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக" என்று சொல்ல வேண்டும்.

(இவ்வாறு கூறிய தலைவர் கலைஞர் அவர்கள் "தமிழ்மொழியை" என்று மூன்று முறை உரக்கச் சொன்னார். மாநாட்டில் கூடியிருந்த

அனைவரும் "மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக", "மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக", "மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக" என்று முழக்கமிட்டனர்.

அதன்பின் "தீர்மானம் நிறைவேறியது" என்று பலத்த கரவொலிக்கிடையே தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.)

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட **31** தீர்மானங்களில் சிறப்புத்தீர்மானம் உட்பட மேலும், கீழ்க்கண்ட **4** தீர்மானங்கள் வெளியிடப்படுகிறது :

## தீர்மானம் – மாநில சுயாட்சி

இந்தியா ஒரு கூட்டாட்சி என்று வர்ணிக்கப்பட்டாலும் அதன் அரசமைப்பு மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட அந்நிய ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய தொடர்புகளின் தொடர்ச்சியாகவே இருந்து வருகிறது. ஏனெனில் நமது அரசியல் சட்டம் ஆங்கிலேயர் இயற்றிய **1935**ஆம் ஆண்டுச் சட்டத்தை அப்படியே பின்பற்றியிருக்கிறது. அதனால்தான் அறிஞர் அண்ணாவின் உயில் என்று சொல்லப்படும் அவரது கடைசிக் கட்டுரையில் **(1969)** இன்றைய அரசியல் சட்டத்தை கொல்லைப்புறமாக கொண்டுவரப்பட்ட ஒருவித இரட்டை ஆட்சி (a sort of dyarchy by the back-door) என்று எழுதியிருந்தார்கள். மத்திய மாநில உறவுகளைப் புதிய முறையில் அமைத்திட ஒரு உயர்மட்டக்குழு (High-power Commission) அமைக்கப்பட வேண்டுமென்று முதல்வர் அண்ணா அவர்கள் **8.4.1967** அன்று டில்லி நிருபர் கூட்டத்தில் அறிவித்தார்கள்.

மத்திய அரசு அம்முயற்சியில் ஈடுபடாததால் அதைத் தொடர்ந்து கலைஞர் முதல்வரானதும் இந்தியாவிலேயே முதல் தடவையாக மத்திய மாநில உறவுகளை ஆய்ந்தறிந்து அறிக்கைதர முன்னாள் நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவினை **1969**–ஆம் ஆண்டு அமைத்தார்.

ராஜமன்னார் குழு தனது அறிக்கையினை 1971–ஆம் ஆண்டு மே மாதம் 27–ஆம் தேதி வழங்கியது. அந்த அறிக்கையினை முதல்வர் கலைஞர் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியாருக்கு அனுப்பி வைத்தார்கள்.

இதுபற்றி ஜூன் 22–ஆம் தேதி முதல்வர் கலைஞருக்கு பதிலெழுதிய இந்திரா காந்தியார் இதுகுறித்து "உங்கள் அரசின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறும்", "இவை முக்கிய பிரச்சனையாதலால் இது குறித்து முதலமைச்சர்களைக் கலந்து பேச உத்தேசித்து இருப்பதாகவும்", குறிப்பிட்டிருந்தார்கள்.

அதன் பிறகு ராஜமன்னார் குழு அறிக்கையை தி.மு.கழகக் குழுவொன்று ஆய்ந்து தனது கருத்துக்களைக் கழகத்திற்கு தெரிவித்தது.

அதன் அடிப்படையில் 1974 ஏப்ரல் 14–ஆம் தேதியன்று வரலாற்று சிறப்புப் பெற்ற மாநிலச்சுயாட்சித் தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்தில் அன்றைய முதல்வர் கலைஞரால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது, மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அதற்கு பிறகு அப்பிரச்சினைக்காகத் தொடர்ந்து தி.மு.கழகம் போராடிக்கொண்டே வருகிறது.

கூட்டாட்சி என்றும், உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றும் வர்ணிக்கப்படும் இந்தியநாட்டில் உள்நாட்டு மத்திய மாநில உறவுகள் உண்மையான கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகவும், மத்தியில் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு பழைய அந்நிய ஏகாதிபத்திய பாணியில் (as a kind of imperial rule on a republican basis) தொடர்ந்து இயங்கி வருவது, கூட்டாட்சிக் கொள்கையிலும் ஜனநாயகக் கொள்கையிலும் நம்பிக்கை கொண்டோரின் பொறுமையினைச் சோதிப்பதாக இருக்கிறது.

எனவே, பல்வேறு மொழி–கலை கலாச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு இனங்களைக் கொண்டதும், துணைக்கண்டம்

போல் பூகோள அளவில் பரந்து கிடப்பதுமான இந்தியத் திருநாட்டில் ஒருமைப்பாட்டைக் காத்திட; ஒற்றுமையை ஆழமான அடித்தளத்தில் அமைத்திட; இந்தியாவில் முழுமையானதும் உண்மையானதுமான கூட்டாட்சி முறையை (Wholesome and genuine federalism) மாநில சுயாட்சி அடிப்படையில் அமைத்திட வேண்டுமென்றும்; அதற்கேற்ற வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் இம் மாநில மாநாடு தொடர்ந்து வற்புறுத்துகிறது. இக்கொள்கையில் ஒத்தக்கருத்துடைய அனைவரோடும் தோளோடுதோள் சேர்த்து பணியாற்றிட தி.மு.கழகம் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

## தீர்மானம் – புதிய பொருளாதாரக் கொள்கை விளைவும் – பொதுத்துறைகள் தனியாருக்குத் தாரைவார்த்தலும்

உலக வங்கி (World Bank), சர்வதேச நிதி நிறுவனம் (I.M.F) ஆகியவற்றின் வற்புறுத்தலின்பேரில் 1991ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு அமல்படுத்தி வருகிற 'புதிய பொருளாதாரக் கொள்கை' சமுதாயத்தில் மேல்மட்டத்தில் இருக்கிற வசதி படைத்த 10 அல்லது 15 சதவித மக்களுக்கு வேண்டுமானால் தற்காலிகமாக உதவுவதாக இருக்கலாமே தவிர; அதற்காகத் தரப்படும் விலை ஏழை எளியோரையும், தொழிலாளிகளையும், விவசாயிகளையும், நலிந்த பிரிவினரையும், நடுத்தர வர்க்கத்தோரையும் மேலும் ஏழ்மையில் ஆழ்த்துவதாக இருப்பதோடு; அதன் விளைவாக மெக்சிகோ, பிரேசில் – ஆகிய நாடுகளுக்கு அடுத்து இந்தியா உலகத்தின் மூன்றாவது பெரிய கடனாளி நாடாக மாறிவிட்ட நிலையும், விரைவில் நமது உள்நாட்டுக் கடனும் வெளிநாட்டுக் கடனும் இப்போது இருப்பதைவிட மூன்று மடங்காக உயர்ந்துவிடும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

தென்கொரியா போன்ற 'ஆசியப்புலிகள்' என்று அழைக்கப்படும் நாடுகளும் ஜப்பானும் இன்று வளர்ச்சிப்பெற்ற நாடுகளோடு போட்டியிடுகின்றன என்றால் அங்கு ஆரம்பகாலத்திலிருந்தே கல்வி, சுகாதாரம் போன்ற சமுதாயத் துறைகளுக்கு (Social Sectors) அதிக

முதலீடு செயயப்பட்டதையும்; துவக்க காலத்தில் முதலீடு செய்யப்பட வேண்டிய துறைகளை அரசு சுட்டிக்காட்டித் திசைதிருப்பியது என்பதையும்; அடிப்படை நிலச்சீர்த்திருத்தத்தின் மூலம் அங்கு சீரான உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை அமைக்கப்பட்டது என்பதையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

ஆனால் உலகத்தில் வாழும் ஏழைகளில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் வாழ்கின்றனர்; அவர்களில் பாதிப்பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாது; அவர்களில் பலர் குழந்தைத் தொழிலாளிகளாக வாழ்கின்றனர். இத்தகைய நிலையில் "புதிய பொருளாதாரக் கொள்கை" காரணமாக பட்ஜெட்டில் நிதிப்பற்றாக்குறையைக் குறைக்கும்போது அந்த வெட்டு; கல்வி, சுகாதாரம், நலிந்த பிரிவினருக்கு உதவும் மான்யம் போன்ற சமுதாயத் துறைகளின் மீது விழுகிறது. அத்துறைகளுக்குப் போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை ; ஒதுக்கப்பட்ட நிதியும் முழுவதுமாகச் செலவிடப்படவில்லை. நமது தொழிலாளி வர்க்கத்தில் மூன்றில் இரண்டு பங்கினர் விவசாயத் துறையில் இருக்கின்றனர். அந்தத் துறையில் வெட்டு விழுகிறது; உரமான்யத்தில் வெட்டு விழுகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையான சந்தைப் பொருளாதாரம் (Market Economy) லாபத்தை அடிப்படையாகக் கொண்டது. அதிக லாபம் கிடைக்கும் திசை நோக்கித்தான் முதலீடு செல்லும். இதனால் ஏழை – நடுத்தர மக்களுக்கும் – நலிந்த பிரிவினருக்கும் எந்தவித நன்மையும் கிட்டாது. அவர்கள் அரசின் ஆதரவு இன்றி நட்டாற்றில் விடப்படுகின்றனர். உதாரணம் : பொது விநியோகத்திற்குத் தரப்படும் மான்யத்தில் கைவைத்தல்; அத்யாவசியப் பொருள்கள் பலவற்றிற்கு இருந்த விலைக் கட்டுப்பாடு நீக்கம், அதன் விளைவாக அவற்றின் விலைகளில் ஏற்றம்; உணவு உற்பத்தி பெருகியிருப்பதாகப் பறைசாற்றியும் காலகண்டி, விதர்பா – ஆகிய இடங்களில் ஏற்பட்ட பட்டினிச் சாவுகள்; அண்மையில் ஆந்திராவில் கைத்தறி நெசவாளர்களிடையே ஏற்பட்ட பட்டினிச் சாவுகள்; Exit Policy – என்ற பெயரில் செய்யப்படுகிற Retrenchment என்கிற வேலைநீக்கம்!

பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் வரவேற்கப்பட வேண்டிய ன்றுதான் என்றாலும், எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றிப் பன்னாட்டு றுவனங்களுக்குக் கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. Globalisation என்கிற பெயரில் உலகப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இவற்றின் விளைவாக மக்களைக் கவரும் வெறும் Brand/Image கொண்ட பொருட்கள் இந்தியாவை ஆக்கிரமித்துக் கொள்ள ஆரம்பித்திருக்கின்றன. உதாரணம் : கெண்டக்கி சிக்கன். இது தேவைதானா? என்று கேள்வி கேட்டு; அதற்கு பதில் தேடும் முயற்சி மேற்கொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டு அந்நிய மூலதனத்திற்கு கதவுகள் திறக்கப் பட்டிருக்கின்றன.

ஊழலுக்குக் காரணமான பர்மிட்–லைசன்ஸ் ராஜ்யம்' ஒழிந்தது வரவேற்கப்பட வேண்டியதுதான் என்றாலும், சுயசார்பிற்கு (Self-reliance)ப் பிரியா விடை கொடுத்துவிட்டுச் சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணம் : கடற்கரை போன்றப் பகுதிகளில் பல்லாயிரம் ஏக்கர்களில் இறால் பண்ணைகள் ; அந்நிய மீன்பிடிப்புக் கப்பல்களுக்கு அனுமதி – அதன்மூலம் உள்நாட்டு மீனவர் பிழைப்பிற்கு ஆபத்து ; சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் வங்கிகளால் புறக்கணிக்கப்பட்டுப் போட்டியைத் தாக்குப்பிடிக்க முடியாமல் நசிந்துவிடும் நிலை!

அதே நேரம் கனரகத் தொழில்களும், புதிய தொழில் நுட்பமும் வெளிநாடுகளிலிருந்து வந்து சேர்வதற்குப் பதில் இந்தியப் பங்குச் சந்தையில் சூதாடுவதற்கு அந்நிய மூலதனம் வரம்பின்றிக்குவிய அனுமதிப்பது இந்திய பொருளாதாரத்திற்கே ஆபத்தானது; ஏனெனில் எந்த நொடியில் அவை வெளியேறி நம்மை நட்டாற்றில் விடும் என்று சொல்ல முடியாது.

'Privatisation' என்று கூறிக்கொண்டு பண்டித நேருவினால் 'இந்தியாவின் நவீன ஆலயங்கள்' என்று கூறப்பட்ட பொதுத்துற

நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்குப் பதில், கண்மூடித்தனமாக தனியார் மயமாக்கப்படுகின்றன. அப்படி தனியாருக்கு விற்கப்படும் பங்குகள் அடிமாட்டு விலைக்குத் தரப்பட்டிருப்பதாகவும்; அதில் பலகோடிக் கணக்கில் ஊழல் மலிந்திருப்பதாகவும் கணக்குத் தணிக்கையாளர் அறிக்கைகளே சுட்டிக்காட்டியிருக்கின்றன. 'முதலாளித்துவத்தின் குரு என்று வர்ணிக்கப்படும் மார்கரெட் தாச்சர் ஆட்சியில்கூட இங்கிலாந்தில் பொதுத்துறையின் பங்குகளைத் தனியாருக்கு விற்கும்போது அது எந்தவித ரகசியமும் இன்றி பகிரங்கமாக (transparent – ஆக) மிக உயர்ந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்ததையும்; தொழிலாளிகளுக்கும் பொது மக்களுக்கும் ஒரு பரவலான அடிப்படையில் அதில் பங்கு கிடைக்கச் செய்ததையும் இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகின்றோம்.

என்வே குறைகளும் – ஆபத்துகளும் மலிந்த, நம்மீது கட்டாயமாக வெளியாரால் திணிக்கப்பட்ட இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்றும் ; நான்காண்டுகால நடைமுறை அனுபவத்தைக் கொண்டு இந்திய மக்கள் அனைவருக்கும் ஏற்றம் தரும் வகையில் மாற்றுப் பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

## தீர்மானம் – 'இந்துத்துவா' விளக்கம் தரும் ஏமாற்றம்

உச்சநீதிமன்றம் தேர்தல் வழக்கு ஒன்றில் அண்மையில் அளித்த தீர்ப்பில், 'இந்துத்துவா' என்னும் குறியீட்டுக்கு; இந்துமதம் என்று மட்டும் பொருள்கொள்ள முடியாது என்றும் இந்தியாவில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கை – கலாச்சாரம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும் பொதுவான பொருளும்தரும் என்றும் கூறியிருப்பது சொற்பொருள் விளக்கமாகுமேயன்றி நடைமுறையாகாது என்பதும், இசுலாம், கிறிஸ்தவர், சீக்கியர் என்னும் மதச்சார்பினர் தம்மை இந்தப் பொதுப்பெயரில் உள்ளடக்கிக் கொள்ள முடியாத தனிமதப் பிரிவினர் என்பதும், இந்தியக் கலாச்சாரப் பண்பாட்டில் ஏறத்தாழ 100க்கு 75 விழுக்காடு இடம் பெற்றுள்ளதான தொல்குடிமக்கள் (திராவிடர்) பண்பாடு இந்துத்துவத்தில்

உரிய இடமும் மதிப்பும் அளிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவது என்பதும்; இந்தியாவில் வாழும் தீண்டப்படாத மக்களை அந்நிலைக்கு ஆளாக்கிய ஒரு மதத்தின் பெயர் அவர்களையும் உள்ளடக்கியதாக அவர்களால் மனதார ஒப்ப முடியாதது என்பதும் – இந்த சொல்லுக்குத் தரும் விரிந்த பொருளால் உண்மையாகாமற்போகாது.

மேலும் நீதிமன்றத்தில் ஒரு சொல் பெறக்கூடிய பொருள் விளக்கம் அந்தச் சொல்லை மக்கள் மன்றத்தில் ஒரு சாரார் உணர்ச்சி வேகத்துடன் பயன்படுத்தும்போது பெற முடியாது. 'இந்துத்துவா' என்னும் சொல்லை 'பாரதம்' என்பது போலவோ, 'இந்தியம்' என்பது போலவோ, பொதுவான குறியீடாகப் பயன்படுத்த இடமுண்டு என்றாலும், 'இந்து' அன்றி மற்றவர் பயன்படுத்துவது இயல்பல்ல என்பதையும் அதை ஒரு சாரார் பயன்படுத்தும்போதெல்லாம் அச்சொல் பொதுவான பொருள் தருவதாகாமல், மத உணர்வு அடிப்படையில் தான் உணர்ச்சியூட்டுவதாகும் என்பதைக் கருதிப் பார்க்கும் இம்மாநாடு, 'இந்துத்துவம்' என்பதைப் போர்வையாகக் கொண்டு வைதீக மதவெறியையும், வருணதரும ஆதிக்கத்தையும் வளர்க்கவும், மதவெறியைத்தூண்டி பிறமதத்தினரை அந்நியப்படுத்தவும் பயன்படுத்துவதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளச் செய்வதற்குத் தேவையான விளக்கத்தைப் பரப்ப மதச் சார்பற்ற இயக்கங்களும் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், 'இந்துத்துவா' என்பது குறித்து உச்சநீதிமன்றம் தந்துள்ள விளக்கத்தால், ஏற்படும் வீளைவை எடுத்துக் காட்டி, உச்சநீதிமன்றம் மறுபரிசீலனை செய்திடக் கேட்டு மைய அரசு சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

## தீர்மானம் – ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை

ஈழத் தமிழர்கள் தமது மரபு வழி தாய் நாட்டிலேயே வாழ முடியாதபடி அவர்களது உடல், உயிர், பொருள் போன்றவை முற்றாக அழிக்கப்படும் சூழ்நிலை தமிழ் ஈழத்தில் இன்று உருவாகியுள்ளது. போர் நெறிமுறை பற்றிய ஜெனிவா ஒப்பந்தத்தை வெளிப்படையாகவே மீறி போருக்குத்

தொடர்பற்ற தமிழர்களுக்கான உணவு, மருந்து மற்றும் இன்றியமையாத பொருட்களை அனுப்ப முடியாதபடி சிங்கள அரசு முற்றுகையிட்டு அங்குள்ள இலங்கை வாழ் தமிழர்களை குழந்தை குட்டிகளுடன் பட்டினி போட்டு இருக்கிறது. ஐ.நா.வின் மனித உரிமைகள் பற்றிய பிரிவுகள் அனைத்திற்கும் எதிராகவும், பன்னாட்டு குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்திற்கு முரணாகவும் இராணுவ பலத்தைக் கொண்டு ஈழத் தமிழ் மக்களை எல்லா வகையிலும் சிங்கள அரசு கொடுமைக்கு ஆளாக்கி வருகிறது. ஈழத்தமிழ் இன மக்களை பூண்டோடு அழித்திட சிங்களஅரசிற்கு எந்தவிதமான உதவியும் இந்தியஅரசு செய்திடலாகாது என்ற வேண்டுகோளை தி.மு.கழகமும் மற்ற அரசியல் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் பலமுனைகளில் இருந்தும், பல வழிகளிலும் எடுத்துச் சொல்லியும் கூட ஈழத் தமிழர் பிரச்சனைக்கு அவர்கள் ஏற்கின்ற வகையில் ஒரு அரசியல் தீர்வை அளித்திட இந்தியஅரசு அக்கறை காட்டாததையும், இலங்கையில் நடைபெற்று வரும் மனிதாபிமானமற்ற இனப்படுகொலைகளை அராஜக செயல்களை இதுவரை கண்டிக்காததையும் இந்த மாநில மாநாடு கண்டிப்பதோடு ஈழத் தமிழர்களை படுகொலை, சித்ரவதை, சீரழிவுகளில் இருந்து காத்திட இந்தியஅரசு உடனடியாக முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறது.

அண்ணா நூற்றாண்டு நூலகம்
- 9 SEP 2010
சென்னை-85


அண்ணாநகர்
தி.மு.கழக
8வது மாநில மாநாட்டு திடல்